
# அத்தியாயம் 2

# தேசிய உற்பத்தியும் செலவினமும்

## 2.1 பொதுநோக்கு

**மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ) 2006இன் 7.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2007இல் உண்மை நியதிகளில் 6.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** பொருளாதாரம் முதலரைப் பகுதியிலான 6.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் இரண்டாம் அரைப்பகுதியில் 7.3 சதவீதம் கொண்ட விரைவான வேகத்தில் வளர்ச்சியடைந்து, உயர் வளர்ச்சிப் பாதையை நோக்கிய முன்னேற்றம் மேலும் பலப்படுத்தப்பட்டதை எடுத்துக் காட்டுகிறது. உயர்ந்தளவான உலக எண்ணெய் விலைகள், மோசமடையும் பாதுகாப்பு அச்சுறுத்தல், மோசமான வானிலை நிலைமைகள் மற்றும் அதிகரித்துச் செல்லும் பணவீக்க அழுத்தங்கள் ஆகிய பல சாதகமற்ற அபிவிருத்திகளுக்கு மத்தியிலும், இலங்கைப் பொருளாதாரம் மூன்றாவது தொடர்ச்சியான ஆண்டாக 2007இல் 6 சதவீதத்திற்கும் கூடுதலான வளர்ச்சியைப் பதிவு செய்து, உள்நாடு அதேபோல் வெளிநாட்டுப் பக்கத்திலிருந்து எழும் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய அதன் உண்மையான மீள் எழுச்சியை எடுத்துக் காட்டியது.

**2007இல் பொருளாதார வளர்ச்சி பரந்த அடிப்படையில் காணப்பட்டது. கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகள் முறையே 7.6 சதவீதத்தாலும், 7.1 சதவீதத்தாலும் அதிகரித்திருக்கையில் வேளாண்மைத்துறை 3.3 சதவீதத்தால் மிதமான அளவில் வளர்ச்சியடைந்தது.** பணிகள் துறை மொத்த வளர்ச்சிக்கு ஆகக்கூடிய பங்களிப்பான 62 சதவீதத்தை ஏற்படுத்தியது. கைத்தொழில்துறையில், கட்டடவாக்கம், ஏற்றுமதித் தயாரிப்பு, மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் செயற்பாடுகள் சிறப்பாகச் செயலாற்றின. அஞ்சல் மற்றும் தொடர்பூட்டல், சரக்குக் கையாளல், போக்குவரத்து மற்றும் நிதியியற் பணிகள் என்பன பணிகள் துறையில் செயலாற்றிய முக்கிய துறைகளாக விளங்கின. வேளாண்மைச் செயற்பாடுகளில் அநேகமானவை சார்பு ரீதியில் உயர் வளர்ச்சி வீதங்களை எய்திய போதிலும் தேயிலை மற்றும் நெல் ஆகிய இரு முக்கிய பயிர்களின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி இத்துறையின் மொத்த வளர்ச்சிச் செயலாற்றத்தைக் குறைத்தது. பொருளாதாரத்தின் விரிவாக்கம் கூடிய பொருளாதார வாய்ப்புக்களை உருவாக்கி தொழிலின்மை வீதத்தில் 2006இன் 6.5 சதவீதத்திலிருந்து



முன்னெப்பொழுதும் பதிவு செய்யப்படாத 6.0 சதவீதத்துக்கான மேலுமொரு வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது.

**2006இன் 7.7 சதவீதத்திலிருந்து 2007இல் 6.8 சதவீதத்துக்கு அவதானிக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியின் மெதுவடைவு மொத்தக் கேள்வி குறைவடைந்து செல்வதை எடுத்துக் காட்டுகிறது.** அண்மைய ஆண்டுகளில், அதிகரித்துச் செல்லும் உள்நாட்டுக் கேள்வி பொருளாதார வளர்ச்சிக்கான உந்து சக்தியை வழங்கியது. 2007இல் குறைந்த வீதம் இருந்த போதிலும் இப்போக்கு அவதானிக்கப்பட்டது. இவ்வாண்டில் நுகர்வு மற்றும் முதலீட்டுக் கேள்வி ஆகிய இரண்டும் பெயரளவு நியதிகளில் 21 சதவீதத்தால் அதிகரித்தன. எனினும், நுகர்வுச் செலவினம் அது போல் முதலீட்டுச் செலவினம் 2006 உடன் ஒப்பிடுகையில் மொ.உ.உ இன் சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டு மொத்தக் கேள்வியிலான குறைவடைவு மத்திய வங்கியின் நாணயக் கொள்கை வரையமைப்பின் கீழ் அதனால் பின்பற்றப்பட்ட கேள்வி முகாமைத்துவ கொள்கைகளில் பிரதிபலிக்கப்பட்டது. அதிகரித்துச் செல்லும் விலைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், பொருட்கள் மற்றும் பணிகளுக்கான வளர்ச்சியடைந்து செல்லும் கேள்வியைக் குறைப்பதற்கு பின்பற்றப்பட்ட நாணயக் கொள்கைகள், வளர்ச்சிச் செயலாற்றத்தின் மீது பயனைக் கொண்டிருந்தமை புலனாகிறது.

**பொருட்கள் மற்றும் பணிகளுக்கான கேள்வியான வெளிநாட்டுக் கேள்வி 2007இல் வளர்ச்சியைத் தூண்டும் வாய்ப்புக்களை அதிகரித்தது.** கைத்தொழில் மற்றும் கனிப்பொருள் ஏற்றுமதிகளுக்கான கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பு இவ்வபிவிருத்திக்கு பெருமளவில் பங்களிப்புச்

**அட்டவணை 2.1**

**நிலையான (2002) விலைகளில் கைத்தொழில்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும்**

| துறை | மாற்ற வீதம் (%) | | மொத்த உள்நாட்டு உற்பத்தி மாற்றங்களுக்கான பங்களிப்பு (%) | | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சவீதப்பங்கு (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2006 | 2007(அ) | 2006 | 2007(அ) | 2006 | 2007(அ) |
| **வேளாண்மை** | 6.3 | 3.3 | 10.3 | 6.0 | 12.3 | 11.9 |
| 1. **வேளாண்மை, விலங்கு வளர்ப்பு மற்றும் காடாக்கல்** | 3.4 | 2.2 | 5.3 | 3.6 | 11.3 | 10.8 |
| 1.1 தேயிலை | - 2.0 | - 2.0 | - 0.4 | - 0.4 | 1.3 | 1.2 |
| 1.2 இறப்பர் | 4.6 | 7.7 | 0.1 | 0.3 | 0.2 | 0.2 |
| 1.3 தெங்கு | 6.4 | 3.9 | 1.2 | 0.8 | 1.4 | 1.3 |
| 1.4 சிறு ஏற்றுமதிப் பயிர்கள் | 2.2 | 5.1 | 0.1 | 0.4 | 0.5 | 0.5 |
| 1.5 நெல் | 2.9 | -6.4 | 0.7 | - 1.7 | 1.8 | 1.6 |
| 1.6 விலங்கு வளர்ப்பு | 8.1 | 7.9 | 0.9 | 1.0 | 0.9 | 0.9 |
| 1.7 ஏனைய உணவுப் பயிர்கள் | 3.0 | 4.4 | 1.6 | 2.5 | 3.9 | 3.8 |
| 1.8 புகையிலை | 38.7 | -25.2 | 0.1 | -0.1 | 0.0 | 0.0 |
| 1.9 வெற்றிலையும் பாக்கும் | 6.7 | 3.3 | 0.1 | 0.0 | 0.1 | 0.1 |
| 1.10 பெருந்தோட்ட அபிவிருத்தி | 4.9 | 5.8 | 0.2 | 0.2 | 0.3 | 0.3 |
| 1.11 ஏனைய வேளாண்மை உற்பத்திகள் | 3.2 | 2.1 | 0.1 | 0.1 | 0.3 | 0.3 |
| 1.12 விறகு மற்றும் காடாக்கல் | 6.5 | 5.2 | 0.5 | 0.5 | 0.6 | 0.6 |
| 2. **மீன்பிடி** | 53.5 | 15.6 | 5.0 | 2.3 | 1.0 | 1.1 |
| **கைத்தொழில்** | 8.1 | 7.6 | 29.8 | 31.7 | 28.2 | 28.5 |
| 3. **சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும்** | 24.2 | 19.2 | 4.7 | 4.8 | 1.7 | 1.9 |
| 4. **தயாரிப்புத்துறை** | 5.5 | 6.4 | 13.1 | 16.8 | 17.7 | 17.7 |
| 4.1 பதனிடுதல் (தேயிலை, இறப்பர், தெங்கு) | 0.8 | 2.4 | 0.1 | 0.2 | 0.7 | 0.6 |
| 4.2 தொழிற்சாலைக் கைத்தொழில் | 5.7 | 6.7 | 12.2 | 15.7 | 15.9 | 15.9 |
| 4.3 குடிசைக் கைத்தொழில் | 5.7 | 5.6 | 0.8 | 0.9 | 1.1 | 1.1 |
| 5. **மின்வலு, வாயு மற்றும் நீர்** | 14.8 | 4.6 | 4.6 | 1.7 | 2.5 | 2.5 |
| 5.1 மின்வலு | 16.2 | 4.6 | 4.3 | 1.5 | 2.2 | 2.2 |
| 5.2 வாயு | 7.6 | 2.9 | 0.2 | 0.1 | 0.2 | 0.2 |
| 5.3 நீர் | 3.6 | 7.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| 6. **கட்டடவாக்கம்** | 9.2 | 9.0 | 7.4 | 8.3 | 6.3 | 6.4 |
| **பணிகள்** | 7.7 | 7.1 | 60.0 | 62.4 | 59.5 | 59.6 |
| 7. **மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம்** | 7.1 | 6.1 | 22.9 | 22.3 | 24.6 | 24.5 |
| 7.1 இறக்குமதி வர்த்தகம் | 6.8 | 3.3 | 8.4 | 4.6 | 9.4 | 9.1 |
| 7.2 ஏற்றுமதி வர்த்தகம் | 3.6 | 8.8 | 2.3 | 5.9 | 4.6 | 4.7 |
| 7.3 உள்நாட்டு வர்த்தகம் | 8.9 | 7.6 | 12.2 | 11.8 | 10.6 | 10.7 |
| 8. **உணவகங்களும் விடுதிகளும்** | 2.5 | - 2.3 | 0.2 | - 0.1 | 0.5 | 0.4 |
| 9. **போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல்** | 12.6 | 10.5 | 19.4 | 19.2 | 12.4 | 12.8 |
| 9.1 போக்குவரத்து | 11.2 | 9.4 | 14.9 | 14.6 | 10.6 | 10.8 |
| 9.2 சரக்குக் கையாளல் - துறைமுகங்களும் பயணிகள் போக்குவரத்து | 20.0 | 8.8 | 1.5 | 0.8 | 0.6 | 0.7 |
| 9.3 அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் | 21.6 | 21.5 | 3.0 | 3.8 | 1.2 | 1.4 |
| 10. **வங்கித்தொழில், காப்புறுதி, மற்றும் உண்மைத்துறை, ஏனையவை** | 8.5 | 8.7 | 9.4 | 11.0 | 8.5 | 8.7 |
| 11. **வதிவிட சொத்துரிமை** | 1.1 | 1.1 | 0.5 | 0.6 | 3.4 | 3.2 |
| 12. **அரச பணிகள்** | 5.0 | 6.0 | 5.2 | 6.8 | 7.7 | 7.7 |
| 13. **தனியார் பணிகள்** | 7.8 | 7.8 | 2.4 | 2.7 | 2.3 | 2.4 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | 7.7 | 6.8 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -20.9 | 15.7 | | | | |
| **மொத்தத் தேசிய உற்பத்தி** | 7.5 | 7.1 | | | | |

(அ) தற்காலிகமானவை

மூலம் : தொகை மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்

**சிறப்புக் குறிப்பு 4**

## தேசிய வருமான மதிப்பீடுகளின் மீதான விளக்கமான குறிப்பு

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களமானது தேசிய வருமானக் கணக்குகள் தொகுப்பிற்கும், பரப்பலிற்கும் அலுவல்சார் ரீதியான பொறுப்பான முகவராக இருக்கின்றது. இருந்த போதிலும் கடந்த காலங்களில், தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் மத்திய வங்கி ஆகிய இரண்டும் தேசிய வருமானப் புள்ளிவிபரவியல் தொகுப்பினையும், பரப்பலையும் செய்து வந்துள்ளன. இவ்விரட்டை முயற்சி மக்களின் மனநிலையில் குழப்பம் ஏற்படுத்துவதற்கு காரணமாகியிருந்ததால், 2007இல் இருந்து மத்திய வங்கி தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட புள்ளிவிபரங்களைப் பயன்படுத்துவதற்கு தீர்மானித்தது.

இருந்தபோதிலும், மத்திய வங்கி பேரண்டப் பொருளாதார முகாமைத்துவ நோக்கத்திற்காக மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதனுடைய வளர்ச்சி வீதம் போன்றவற்றின் எறிவுகளைத் தொகுப்பதைத் தொடர்கின்றது. இத்தகைய ஒரு நடைமுறையானது மத்திய வங்கி நாணயக் கொள்கை நோக்கத்திற்காக பணவீக்கத்தை எறிவு செய்யும் போது அது தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் உண்மையான விலைமட்டம் மற்றும் பணவீக்கத்தைத் தொகுக்கும் போது, எறிவு செய்யப்படும் பொது விலை மட்டம் மற்றும் பணவீக்கத்தை தொகுப்பதுடனும், எதிர்வு கூறலுடனும் முரண்படாமல் இருக்கும்.


இந்தக் கொள்கைக்கேற்ப, இவ்வெளியீடானது தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தால் தொகுக்கப்பட்ட மொ.உ.உ. அளவீடுகளை 2003இலிருந்து ஒப்பீட்டு நோக்கத்திற்காக பயன்படுத்துகின்றது. இதன் விளைவாக, தொகைமதிப் புள்ளிவிபரத்திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளைப் பயன்படுத்தி கணிக்கப்பட்ட வீதங்கள் மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்டு மத்திய வங்கியின் பல்வேறு சட்ட ரீதியான அறிக்கைகளின் பிரசுரிக்கப்பட்ட மொ.உ.உ. மதிப்பீடுகளைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்ட வீதங்களிலிருந்து வேறுபடலாம். சேமிப்பு, முதலீடு, அரசிறை, அரச செலவினங்கள், ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை, அரச கடன் மொ.உ.உற்பத்தியன் வீதமாக வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு நிலுவை மற்றும் நிலுவைகள், தலா வருமானம் உள்ளடங்கலாக சில பேரண்டப் பொருளாதார மாறிகளின் கணிப்பீடு மத்திய வங்கியினால் முன்னர் பிரசுரிக்கப்பட்டவைகளிலிருந்து வேறுபடலாம். தரவுகளைப் பயன்படுத்துபவர்களும் பகுப்பாய்வாளர்களும் தரவுக்கான மூலவளங்களை ஒப்பிடும் போது அவதானமாக இருக்க வேண்டி இருக்கும்.

செய்தது. முதன்மைப் பொருட்களுக்கான பன்னாட்டு விலைகள் அதிகரித்துச் செல்வதைத் தொடர்ந்து பாரிய இலாபங்களை வேளாண்மை பொருட்களின் விலைகள் அறிவித்த போதிலும், வேளாண்மை ஏற்றுமதிகள் வழங்கல் பற்றாக்குறைகள் காரணமாக மிதமாகவே வளர்ச்சியடைந்தன.

**இதேவேளை, வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்துக்காக (வெதேகாவ) சீராக்கப்பட்ட மொ.உ.உ என வரைவிலக்கணம் செய்யப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி (மொ.தே.உ) மொ.உ.உ வளர்ச்சியைவிட 7.1 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் வளர்ச்சியடைந்தது.** பெரும்பாலும் உயர் உலக வட்டி வீதங்கள் அதுபோல் 2007இல் அலுவல்சார் ஒதுக்குகள் மேலும் ஒன்று சேர்ந்தமையின் முக்கிய காரணத்தால் 44 சதவீதத்தால் அதிகரித்த அலுவல்சார்ந்த ஒதுக்குகளின் முதலீட்டிலிருந்தான அதிகரித்த வட்டி வருமானத்தின் முக்கிய காரணத்தால் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் 2007இல் முன்னேறிய போதிலும் தொடர்ந்தும் எதிர்க்கணியமாகவே விளங்கியது. இத்துடன், வர்த்தக வங்கிகள் உள்ளிட்ட தனியார்துறையின் வெளிநாட்டு நிதியியற் சொத்துக்களிலிருந்தான வருவாய்களும் உலகளாவிய உயர் வட்டி வீதங்கள் காரணமாக அதிகரித்தன.

**நடைமுறைச் சந்தை விலைகளிலான மொ.உ.உ 2007இல 21.8 சதவீத அதிகரிப்பைக் கொண்டு ரூ. 3,578 பில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன், உண்மைப் பொருளாதாரச் செயற்பாட்டில், விரிவாக்கத்தையும், பொதுவிலை மட்டத்தில் அதிகரிப்பையும் பிரதிபலிக்கிறது.** மொ.உ.உ சுருக்கியால் அளவிடப்பட்ட பொதுவான பணவீக்கம் 2006இல் பதிவு செய்யப்பட்ட 11.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14.0 சதவீதமாக விளங்கியது. இதன்படி, நடு ஆண்டுக் குடித்தொகை 20,010 ஆயிரம் என எடுக்கப்பட்டு, 2007இற்கான தலைக்குரிய மொ.உ.உ ரூ.178,830 என மதிப்பிடப்பட்டதுடன் பொது விலை மட்டத்திலான அதிகரிப்பைக் காட்டிலும் இது பதிவு செய்த உயர்ந்தளவான 21.0 சதவீத அதிகரிப்பு சராசரியாக வாழ்க்கைத் தரங்களில்

வரைபடம் 2.1 **ஆண்டு வளர்ச்சி வீதங்கள்**



பொதுவான முன்னேற்றத்தை எடுத்துக் காட்டியது. ஐ.அ.டொலர் நியதிகளில் தலைக்குரிய மொ.உ.உ கடந்த ஆண்டின் ஐ.அ.டொலர் 1,421 இலிருந்து 2007இல் ஐ.அ.டொலர் 1,617 இற்கு 13.7 சதவீதத்தால் அதிகரித்தது. இதன்படி, இலங்கை உலக வங்கியின் வகைப்படுத்தல்படி தலைக்குரிய வருமானம் ஐ.அ.டொலர் 756 இற்கும் 2,995 இற்கும் இடையேயான குறைந்த நடுத்தர வருமான வகையினுள் மேலும் மேல் நோக்கி நகர்ந்தது.

**உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2006இன் ரூ.499 பில்லியனிலிருந்து 2007இல் ரூ.629 பில்லியனுக்கு 26.0 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், உள்நாட்டு சேமிப்பு விகிதமும் (மொஉஉ இன் சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள்) 2006இன் 17.0 சதவீதத்திலிருந்து 2007இல் 17.6 சதவீதத்திற்கு அதிகரித்தது.** நுகர்வு விகிதத்திலான சுருக்கம் மற்றும் சேமிப்பு விகிதத்திலான அதிகரிப்பு இலங்கை மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட கேள்வி முகாமைத்துவக் கொள்கைகளின் பயன்பாட்டை வலியுறுத்துகிறது. கம்பனித்துறையிலான அதிகரித்த இலாபகரத் தன்மையும் இவ்வதிகரிப்புக்கான கருவியாக விளங்கியது. அரச சேமிப்புக்கள் எதிர்க்கணியமாக தொடர்ந்து விளங்கிய போதிலும் 2007இல் அரசின் குறைச் சேமிப்புக்களின் மட்டம் குறைவாக இருந்ததன் மூலம் உள்நாட்டுச் சேமிப்புக்களின் மேம்பாட்டிற்கு பங்களிப்புச் செய்தது. வெளிநாட்டிலிருந்தான தேறிய மாற்றல்களிலான அதிகரிப்பு மற்றும் வெளிநாட்டிலிருந்து தேறிய காரணி வருமானத்தில் ஏற்பட்ட மேம்பாட்டால் தேசிய சேமிப்புக்களும் அதிகரித்தன.

## 2.2 துறைவாரியான வெளியீடு, கொள்கைகள், நிறுவன ரீதியிலான உதவி மற்றும் பிரச்சினைகள்

### வேளாண்மைத்துறை

**வேளாண்மைத்துறை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்துறை 2007இல் மிதமானளவில் வளர்ச்சியடைந்ததுடன் பெறுமதி கூட்டல் நியதிகளில் 3.3 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இறப்பர் மற்றும் கால்நடை உற்பத்தியிலான குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, மற்றும் மீன்பிடித்துறையின் முழு அளவிலான மீட்சி இவ்வளர்ச்சிக்கு பெருமளவு பங்களிப்புச் செய்தது. முந்திரிப்பருப்பு மற்றும் கொக்கோ போன்ற சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி அதுபோல் பழங்கள் மற்றும் மரக்கறிகளின் உற்பத்தியும் 2007இல் அதிகரித்தன. தேயிலை மற்றும் நெல் உற்பத்தியில் வானிலை சார்ந்த தற்காலிக பின்னடைவு 2008இல் மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### ஏற்றுமதி வேளாண்மை

**2007இல் தேயிலை உற்பத்தி 305 மில்லியன் கிலோ கிராம்களுக்கு 2 சதவீதத்தால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.** 2006இன் இறுதிப் பகுதியில் பெருந்தோட்டத் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட மெதுவான வேலை செய்தலைத் தொடர்ந்து இடம் பெற்ற வேலை நிறுத்தம் மற்றும் 2007 முற்பகுதியில் நிலவிய வரட்சியான வானிலை நிலைமைகள் தேயிலை உற்பத்தியிலான வீழ்ச்சிக்கான பங்களிப்புக் காரணிகளாக

அட்டவணை 2.2

வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (1997-2000=100)

| விடயம் | 2006(அ) | 2007(ஆ) | சதவீதமாற்றம் % 2006/07 |
|---|---|---|---|
| **வேளாண்மை, மீன்பிடி** | 108.9 | 111.4 | 2.3 |
| 1.வேளாண்மை | 111.7 | 112.2 | 0.5 |
| 1.1. வேளாண்மை உற்பத்திகள் | 111.6 | 111.3 | -0.3 |
| தேயிலை | 108.2 | 106.0 | -2.0 |
| இறப்பர் | 113.2 | 121.9 | 7.7 |
| தெங்கு | 100.3 | 103.3 | 3.0 |
| நெல் | 125.4 | 117.4 | -6.4 |
| ஏனைய பயிர்கள் | 108.3 | 112.5 | 3.9 |
| 1.2 கால்நடை | 112.1 | 120.2 | 7.3 |
| 2. மீன்பிடி | 92.0 | 106.6 | 15.8 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

விளங்கின. விதந்துரைக்கப்பட்ட மட்டங்களுக்குக் கீழான வளமாக்கிப் பிரயோகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் விளைச்சல் மட்டங்களைப் பாதித்திருக்கக் கூடும்.

**தேயிலை விலைகளில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பு காரணமாக தேயிலை ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்து, தேயிலைத் துறையில் சார்பு ரீதியில் காணப்படும் உயர் தொழிற்பாட்டுச் செலவுகளை எதிரீடு செய்தது.** கூலிகள், மின்வலு விலைகள் மற்றும் வளமாக்கி விலைகள் இவ்வாண்டில் கணிசமானளவில் அதிகரித்தன. பெருந்தோட்டத் தொழிலாளர் ஒருவரின் ஆகக் குறைந்த நாளாந்தக் கூலி 2007 யூனில் ரூ.189 இலிருந்து ரூ.260 இற்கு அதிகரிக்கப்பட்டு 38 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்தது. எனினும், இவ்வாண்டில் சராசரி ஏற்றுமதி விலை மற்றும் கொழும்பு ஏல விலை முறையே 31.7 சதவீதத்தாலும், 40 சதவீதத்தாலும் அதிகரித்தன. கொள்வனவு செய்யப்பட்ட கொளுந்துக்காக சிறு உடமையாளர்களுக்கு செலுத்தப்பட்ட சராசரி விலை கிலோ கிறாமொன்றுக்கு ரூ.40.88 இற்கு 40 சதவீதத்தால் அதிகரித்தது. தேயிலைத் துறையில், 0.2 சதவீதம் கொண்ட தற்போதைய வருடாந்த மீள் நடுகை வீதத்தை மேம்படுத்துவதற்கான மீள்நடுகைக்கான உதவு தொகைத் திட்டங்கள் கம்பனித் துறையில் இலங்கைத் தேயிலைச் சபையாலும், சிறு உடமையாளர் துறையில் தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபையாலும் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவ்வாண்டில், அவற்றின் உற்பத்திகளுக்கு பெறுமதிக்கூட்டலை வழங்கும் தீங்கு விளைவிக்கின்ற பகுப்பாய்வு மட்டச் சான்றிதழைப் பெறும் பொருட்டு தேயிலைத் தொழிற்சாலையை நவீனமாக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட்டது. பெருந்தோட்டத் துறையிலுள்ள தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு குறைந்த செலவில் மின்வலுவை வழங்குவதற்கு சிறியளவான மின் உற்பத்தி நிலையங்களின் அபிவிருத்திக்கு ஊக்கமளிக்கப்பட்டது.

**இறப்பர் உற்பத்தி 118 மில்லியன் கிலோ கிராம்களுக்கு 7.7 சதவீதத்தால் அதிகரித்தது.** பாலெடுக்கும் உச்சக் காலப்பகுதியில் ஏற்பட்ட தொழிலாளர் பிணக்கிற்கு மத்தியிலும், தொடர்ச்சியான கவர்ச்சிகரமான விலைகள் இறப்பர் உற்பத்தியை, விசேடமாக உற்பத்தித் திறன் மேம்பாடுகளுடாக அதிகரிக்கச் செய்தன.

**இறப்பர்த் துறையில் மேற்கொள்ளப்படும் மேலதிக உற்பத்தி மேம்பாடுகள் பன்னாட்டுச் சந்தையில் இயற்கை இறப்பருக்கான உயர் விலைகளிலிருந்து கிடைக்கும் நன்மைகளை அதிகரிக்கும்.** இலங்கையில் சராசரி விளைவு வீதம் கிட்டத்தட்ட 1,260 கிலோ கிறாம்களுக்கு படிப்படியாக அதிகரித்து வந்த போதிலும் ஆண்டொன்றுக்கு ஏக்கர் ஒன்றுக்கான உள்ளார்ந்த விளைவு வீதம் 1,500 கிலோ கிறாம்களாகும். இறப்பர் சிறு உடமையாளர்கள் அவர்களது பெருந்தோட்டங்களில் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு குறுகிய காலத்தைப் போன்று நீண்டகால முறைகளையும் பின்பற்றலாம். விதந்துரைக்கப்பட்ட மட்டத்தில் தரமான வளமாக்கியைப் பிரயோகித்தல் விளைவு வீதத்தை அதிகரிப்பதற்கு மிகவும் முக்கியமானதாகும். இத்துடன், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தால் விதந்துரைக்கப்பட்ட வேளாண்மை முகாமைத்துவ நடைமுறைகளைக் கடைப்பிடித்தல், புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாடு, உயர் விளைவு வீதத்தைக் கொண்டுள்ள பதியங்களை பயிர் செய்தல், தெரிந்தெடுக்கப்பட்ட உற்பத்தித் திறனற்ற காணிகளில் மண் முகாமைத்துவ நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் மண்ணின் நிலைமையை மேம்படுத்தல், களை பிடுங்குதல் மற்றும் நீர்த் தடுப்பை மேம்படுத்தல் இறப்பர்க் கைத்தொழிலில் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கான உதவியை வழங்கும்.

**இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம், இறப்பர் கைத்தொழிலின் முன்னேற்றத்துக்காக ஆராய்ச்சித் தொடர்களை நடாத்தியது.** இவை, பால் எடுப்பவரின் தேர்ச்சித் தேவையைக் குறைக்கும் புதிய பால் வெட்டும் கத்தியை விருத்தியாக்கல், வர்த்தகப் பாவனைக்காக (இது தட்டை இறப்பருக்கான வழமையான காய வைக்கும் காலப்பகுதியை ஆறு நாட்களிலிருந்து ஒரு நாளுக்குக் குறைக்கும்) எடுத்துச் செல்லக் கூடிய சிறிய அளவான தட்டை இறப்பர் புகையூட்டல் அலகை அறிமுகப்படுத்தல் மற்றும் குறைந்த செலவுடைய களை தடை செய்யும் தரை விரிப்பை விருத்தி செய்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

**தெங்கு உற்பத்தி சாதகமான வானிலையால் நன்மையடைந்து 2007இல் 2,869 மில்லியன் காய்களுக்கு 3 சதவீதத்தால் அதிகரித்தது.** எனினும், இவ்வாண்டில் தேங்காய் மற்றும் தேங்காயை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் விலைகள் கணிசமானளவில் அதிகரித்து விலை உயர்ந்த நிலத்துக்கடியில் இருந்து கிடைக்கும் எண்ணெய்க்கு சேதன எண்ணெய்களுக்கான அதிகரித்துச் செல்லும் கேள்வியின் உலகப் போக்கைப் பிரதிபலிக்கிறது. தேங்காயின் உயர் விலைகள் தேங்காய்த் துருவல் கைத்தொழிலை மோசமாகப் பாதித்து சில தொழிற்சாலைகளை மூடுவதற்கும், தொழில்நிலை இழப்பிற்கும் இட்டுச் சென்றது.

**தெங்குக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு அரசு பல வழிமுறைகளை மேற்கொண்டது.** ஏற்றுமதிகளுக்காக தெங்கை அடிப்படையாகக் கொண்ட உயர் பெறுமதி கூட்டலைக் கொண்டுள்ள உற்பத்திகளின் தயாரிப்பை ஊக்கப்படுத்துவதற்கு 2007 மே 23 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் புதிய தீர்வை அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. அவ்வாறான உற்பத்திகளுக்கான தீர்வை குறைந்த பெறுமதி கூட்டல்களைக் கொண்டுள்ள உற்பத்திகளுக்கான தீர்வைகளை விட குறைவானதாகும். வளமுள்ள தென்னங் காணிகள் துண்டாக்கப்படுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், தென்னை மரங்களை அங்கீகாரமின்றி தறிப்பதை தடை செய்வதற்கான தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது. தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தால் விதந்துரைக்கப்பட்ட நாடுகளிலிருந்து 2008 பெப்புருவரி வரை 30,000 தொன் உயர்த்திய தேங்காயை இறக்குமதி செய்வதற்கு அரசு அனுமதியளித்தது. தேங்காய் மற்றும் தேங்காய் எண்ணெயின் அதிகரித்துச் செல்லும் விலைகளைக் குறைப்பதற்கு உடன் தேங்காய் ஏற்றுமதிகள் மீது தற்காலிகத் தடை விதிக்கப்பட்டதுடன் தேங்காய் எண்ணெய் இறக்குமதிகளுக்கு தீர்வைத் தளர்த்தல் வழங்கப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெயின் மீது அதியுயர் வீதமான 28 சதவீதத்தால் பேணப்பட்ட இறக்குமதித் தீர்வை

**அட்டவணை 2.3**

**முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்**

| வகை | அலகு | 2006(அ) | 2007(ஆ) |
|---|---|---|---|
| **1. தேயிலை** | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில் கி.கி | 310.8 | 304.6 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | 000 எக்டேயர்கள் | 222 | 222 |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | 000 எக்டேயர்கள் | 193 | 193 |
| 1.4 உற்பததிச் செலவுகள் (ஈ) | ரூபா/கி.கி | 188.40 | 237.10 |
| 1.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி | 198.87 | 279.10 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 279.97 | 364.28 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 1,338 | 1,353 |
| 1.7 புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 16 | 4 |
| 1.8 மொ.உ.உ. இன் வீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 1.4 | 1.7 |
| **2. இறப்பர்** | | | |
| 2.1 உற்பத்தி | மில் கி.கி | 109.2 | 117.6 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு (ஊ) | 000 எக்டேயர்கள்-ர்- | 120 | 120- |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு(ஊ) | 000 எக்டேயர்கள் | 97 | 93 |
| 2.4 உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி | 97.20 | 104.82 |
| 2.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலங்கள் (ஆர்எஸ்எஸ்1) | ரூபா/கி.கி | 202.55 | 234.22 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 189.86 | 234.48 |
| 2.6 மீள்நடுகை (எ) | எக்டேயர்கள் | 2,372 | 1,474 |
| 2.7 புதிய பயிரிடுகை (எ) | எக்டேயர்கள் | 922 | 1,701 |
| 2.8 மொ.உ.உ.வின மூலமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.8 | 0.7 |
| **3. தெங்கு** | | | |
| 3.1 உற்பத்தி | மில் காய்கள் | 2,785 | 2,869 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | 000 எக்டேயர்கள் | 395 | 395 |
| 3.3 உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 7.00 | 10.25 |
| 3.4 சராசரி விலை | | | |
| - உற்பத்தியாளர் விலை | காய்க்கு ரூபா | 11.97 | 16.87 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) (ஏ) | காய்க்கு ரூபா | 24.26 | 27.67 |
| 3.5 மீள்நடுகை /கீழ்பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 3,785 | 2,529 |
| 3.6 புதிய பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 4,026 | 2,957 |
| 3.7 மொஉ.உ.வின் மூலமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 1.2 | 1.3 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குபவரின் இலாபம் உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடல் மட்டும்
(ஊ) தொகை மதிபபுப் புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தால் 2003இல் நடாத்தப்பட்ட இறப்பரின் நிலப்பரப்பு அளவீட்டை அடிப்படையாகக் கொண்டது.
(எ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்செய்கைஉதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு
(ஏ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்
(ஐ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.

மூலங்கள் : இலங்கைத் தேயிலைச்சபை
தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மை
தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்
தெங்குப் பயிர்செய்கைச் சபை
தெங்கு அபிவிருத்தி மேலாண்மை சபை
பெருந்தோட்டக் கம்பனிகள்
இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

தற்காலிகமாக 10 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது.

**உற்பத்தித்திறனை மேம்படுத்தல் பயிர் பாதுகாப்பு மற்றும் தெங்கை அடிப்படையாகக் கொண்ட புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தல் ஆகிய அதன் ஆராய்ச்சி செயற்பாடுகளை தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் தொடர்ந்து மேற்கொண்டது.** பயனுள்ள வகையில் தொழில்நுட்பத்தைப் பரப்புவதற்காக வெவ்வேறான பிரதேசங்களில் தெங்குப் பயிர்ச் செய்கையாளர்களுக்கான கள நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. தொழில் முயற்சியாளர்கள் அவர்களின் வருமானத்தை உயர்த்துவதற்கு அவர்களிடையே சிறிய மற்றும் நடுத்தர அளவான வருமானத்தை ஊக்குவித்தல் மீதான விதந்துரைப்புடன் விடத்த நிலையங்களூடாக தெங்கு உற்பத்திகள் ஊக்குவிக்கப்பட்டன. இதேவேளை, மாத்தறை மற்றும் வெலிகம பிரதேசங்களில் புதிய தெங்கு நோய் ஒன்று அறிவிக்கப்பட்டது. இந்நோய் வெலிகம வாடும் நோய் என பெயரிடப்பட்டுள்ளதுடன் இது கேரளாவில் அவதானிக்கப்பட்ட வேர் வாடும் நோயைப் போல் காணப்பட்டது. இந்நோய் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவக் கூடுமாதலால் இப்பிரதேசங்களிலுள்ள நிலைமை தீர்க்கப்பட வேண்டும்.


**கறுவா, கராம்பு மற்றும் மிளகு போன்ற ஏனைய வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தி 2007இல் கலப்பான செயலாற்றத்தைக் காட்டின.** கொக்கோ (48 சதவீதம்), முந்திரிப் பருப்பு (20 சதவீதம்), வெற்றிலை (6 சதவீதம்), மிளகு (5 சதவீதம்) மற்றும் கறுவா (5 சதவீதம்) என்பவற்றின் உற்பத்தி அதிகரித்திருக்கையில் கராம்பு (16.4 சதவீதம்), பாக்கு (6.8 சதவீதம்) மற்றும் கோப்பியில் (1.1 சதவீதம்) உற்பத்தி வீழ்ச்சியடைந்தன.

## உள்நாட்டு வேளாண்மை

**2007இல் நெல் உற்பத்தி 3,128,881 மெற்றிக் தொன்களுக்கு 6.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** 2006/ 2007 பெரும்போகம் மற்றும் 2007 சிறுபோகத்தில் நெல்லின் உற்பத்தி அளவு முறையே 7.7 சதவீதத்தாலும், 4 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புக் காரணங்கள் காரணமாக வேளாண்மையாளர்கள் இடம்பெயர்ந்தமை மற்றும் வானிலை நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் இவ்வீழ்ச்சிக்கு பெருமளவில் பங்களித்தன. 2006/07 பெரும்போகம் மற்றும் 2007 சிறுபோகத்தில் கிழக்கு மாகாணத்தில் பயிரிடப்பட்ட நிலப் பிரதேசம் முறையே 35 சதவீதத்தாலும் 18 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது. 2006 ஒத்தோபர் - திசெம்பரில் நிலவிய பலத்த மழை மற்றும் வெள்ளம் குறிப்பிட்ட நெல் வளரும் மாவட்டங்களில் பயிரை அழித்தன. இத்துடன், 2006 சிறுபோகத்தில் நெல்லின் குறைவான உற்பத்தியாளர் விலைகளும் (ரூ.13.00 இற்கும் ரூ.15.00 இற்கும் இடைப்பட்ட வீச்சில்) 2006/2007 பெரும்போகத்தில் பயிரிடப்பட்ட பிரதேசத்தின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு காரணமாக விளங்கியது. எனினும், எக்டேயருக்கான உற்பத்தித்திறன் 4,137 கிலோ கிறாம்களிலிருந்து 4,385 கிலோ கிராம்களுக்கு அதிகரித்தது.

**அரசின் நெற் கொள்வனவுத் திட்டம் 2007இலும் தொடர்ந்து தொழிற்பட்டது.** இதன்படி, வேளாண்மை உற்பத்திகள்

வரைபடம் 2.2 அரிசி: நிரம்பலும் கேள்வியும்




சந்தைப்படுத்தும் அதிகாரசபை 2006 சிறுபோகத்திலிருந்து நெல்லைக் கொள்வனவு செய்ய ஆரம்பித்ததுடன், இது நீள விதைகளை (நாடு) கிலோக் கிறாம் ஒன்றுக்கு ரூ.16.50 வீதமும் சிறிய விதைகளை (சம்பா) கிலோ கிறாம் ஒன்றுக்கு ரூ.17.50 வீதமும் கொள்வனவு செய்தது. அரசு 2006/07 பெரும்போகத்தில் 90,997 மெற்றிக் தொன்கள் நெல்லைக் கொள்வனவு செய்தற்கு ரூ.1,543 மில்லியனை செலவழித்த வேளையில் 2007 சிறுபோகத்தில் சந்தை விலைகள் அரசால் செலுத்தப்பட்ட விலைகளை விட உயர்ந்து காணப் பட்டமையால், இக்காலப்பகுதியில் கொள்வனவுக்காக நெல் இருப்புக்கள் கிடைக்கவில்லை.

**நெற்துறையில் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு பலதரப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.** உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு புதிய தொழில்நுட்பங்களுடன் வேளாண்மை நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கு வேளாண்மைத் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'ஜெயா' செய்முறை நிகழ்ச்சித்திட்டம் 2007இலும் தொடர்ந்து செயற்பட்டது. உயர் உள்ளார்ந்த வளத்தைக் கொண்ட பிரதான நீர்ப்பாசனத் திட்டங்களை உள்ளடக்கும் தானியக் களஞ்சிய பிரதேச நிகழ்ச்சித்திட்டத்துடன் அரிசி உற்பத்தி 'ஜெயா' நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. 2007இல், 150 புதிய சாறுகேதத ஜெயா நிறுவப்பட்டதுடன் 8,910 வேளாண்மையாளர்கள் மற்றும் அலுவலர்கள் அரிசி உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு பயிற்றுவிக்கப்பட்டனர். நெல் வேளாண்மையாளர்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள ஆகப் பிந்திய தொழில்நுட்பத்தை மேற்கொள்ளும் பொருட்டு 948 உச்ச விளைவு வீத ஜெயா செய்முறைகள் நடத்தப்பட்டன. அரிசியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை பிரபல்யமாக்குவதற்காக அரிசிக்கு வர்த்தக அடையாளமிடும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றன. பிரதேசச் செயலாளர் பிரிவு மட்டத்தில் மாவட்ட மட்டத்திலான வேளாண்மை தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவுகளை (குறுசி சேவபியஸ) நிறுவுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் வேளாண்மையாளர்கள், விரிவாக்க அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்களுக்கான பயிற்சி மற்றும் புதிய வேளாண்மை

**அட்டவணை 2.4** **நெல்துறை மீதான புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | 2006(அ) | | | 2007(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 591 | 319 | 910 | 525 | 291 | 817 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பு | '000 எக்டேயர்கள் | 586 | 314 | 900 | 512 | 284 | 795 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 525 | 283 | 808 | 459 | 255 | 713 |
| உற்பத்தி | '000 மெற்றிக்தொன்கள் | 2,136 | 1,206 | 3,342 | 1,971 | 1,158 | 3,129 |
| | '000 புசல்கள் | 102,350 | 57,814 | 160,164 | 94,449 | 55,050 | 149,499 |
| விளைச்சல் (இ) | கி.கி/ எக்டேயர்கள் | 4,069 | 4,263 | 4,137 | 4,298 | 4,543 | 4,385 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ.மில்லியன | 552 | 438 | 990 | 605 | 522 | 1,127 |
| அரிசி இறக்குமதிகள் | '000 மெற்றிக்தொன்கள் | - | - | 12 | - | - | 88 |
| இறக்குமதிகளின் நெல்லிற்குச்சமன் | '000 மெற்றிக்தொன்கள் | - | - | 18 | - | - | 129 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) பெரும்போக, சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அதே வேளையில் மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் சராசரி விளைவு கணக்கிடப்படுகின்றது.

மூலங்கள்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

தொழில்நுட்பங்களை செய்முறைத் திட்டங்களுக்காக கன்னூறுவ மற்றும் பட்டஅத்தவில் வேளாண்மை தொழில்நட்ப பேட்டைகள் நிறுவப்பட்டன. ஊடகங்களுடாக வேளாண்மை தொடர்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டன.

**பல காரணங்களால் அரிசி விலைகள் 2007இன் இறுதியை நோக்கி பெருமளவில் அதிகரித்தன.** கோதுமைமா விலைகளில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்புக்களுடன் அரிசி நுகர்வுக்கான கேள்வி கணிசமானளவில் அதிகரித்தன. எல் நினோ நிலைமைகள் மற்றும் கோதுமை மீதான ஏற்றுமதிவரி உலகளாவிய கோதுமை உற்பத்தியின் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்று விலைகளை அதிகரிக்க உதவின. இப்போக்கு மேலும் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. அரசு சுங்கத் தீர்வையின்றி அரிசி இறக்குமதிகளை அனுமதித்த போதிலும், அதிகரித்துச் செல்கின்ற கேள்வியை எதிர்கொள்ள வழங்கல் போதுமானதற்றதாகையால் அரிசியின் விலைகள் தொடர்ந்து அதிகரித்தன.

**கரும்பு வழங்கலில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் செவனகல சீனித் தொழிற்சாலையில் தொழிலாளர் அமைதியின்மையின் முக்கிய காரணமாக உள்நாட்டுச் சீனி உற்பத்தி 2007இல் 43 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** வரட்சியான காலநிலை நிலைமைகள் மற்றும் சார்பு ரீதியிலான உயர் வளமாக்கி விலைகளும் இவ்வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. சாதகமற்ற சந்தை நிலைமை காரணமாக அநேகமான வேளாண்மையாளர்கள் வாழைப் பயிர்ச்செய்கைக்கு மாறியமையால் 2007இல் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு 21 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, அறுவடை செய்யப்பட்ட கரும்பின் அளவு 40 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தனியார் கரும்புக் கொள்வனவுகளும் கிட்டத்தட்ட அரைவாசியால் வீழ்ச்சியடைந்தது. எனினும், லுனுகல பிரதேசத்தில் கரும்பு கம்பளிப் பூச்சியால் ஏற்படும் எபிட்டு எனப்படும் நோயால் பாதிப்புக்குள்ளான கரும்புத் தோட்டங்களை புத்தாக்கம் செய்வதற்கு உதவி வழங்கப்பட்டது. உத்தேசிக்கப்பட்ட பிபிலை சீனி அபிவிருத்தி செயற்றிட்டம் சார்பாக முதற்கட்ட சாத்திய வள ஆய்வு நடாத்தப்பட்டது. ஹிங்குறான மற்றும் கந்தளாய் சீனித் தொழிற்சாலைகளை மீள ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**சீனி ஆராய்ச்சி நிறுவனம் இரு உயர் விளைவு வீதத்தைக் கொண்டுள்ள வர்த்தக கரும்பு வகைகளை விருத்தி செய்து பரிசோதனை செய்தது.** இதை மேலும் மதிப்பிடுவதற்கு, இவை செவனகல, பெல்வத்தை மற்றும் ஹிங்குரான சீனித் தொழிற்சாலைகளின் வேளாண்மையாளர்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்டன. ஹிங்குரான சீனித் தொழிற்சாலையில் பண்ணைகளை அமைப்பதற்கு பயிரிடல் மூலப்பொருட்கள் வழங்கப்பட்டது. மெதகம மற்றும் தெகிகம கிராமங்களுக்குப் பொருத்தமான வகைகளை இனங்காணும் குறிக்கோளுடன் 16 உள்ளார்ந்த வளம் கொண்ட வகைகளைப் பயன்படுத்தி இக்கிராமங்களில் ஏற்றுக் கொள்ளக்கூடிய கரும்பின் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

### காடாக்கல்

**அரசாங்கம் மற்றும் கொடை முகவர்களின் முக்கிய கவனத்துடனும் அதேபோன்று தனியார் துறை மற்றும் சமூகத்தினுடைய சிறந்த பங்களிப்பினாலும் காடாக்கல் செயற்பாடுகள் தொடர்ந்தன.** காடு மூலவளங்கள் முகாமைத்துவ செயற்திட்டமானது காடாக்கல் பராமரிப்பு, முகாமைத்துவம் மற்றும் மீள்காடாக்கலை ஊக்குவிப்பதற்கு தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டது. சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆசிய நாடுகளில் 2006இல் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப புனருத்தாபனத்துக்கான காடாக்கல் நிகழ்ச்சித்திட்டம் 2007இல் பூர்த்தியடைந்தது. ஜற்றோபா மஞ்சள் விதைகளைப் பயன்படுத்தி உயிரின எரிபொருளின் உற்பத்திக்காக கண்டி மற்றும் பொலனறுவை மாவட்டங்களில் "ஜீவயாவய" என்ற ஆராய்ச்சி மட்டத்திலான முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தை காட்டுத் திணைக்களம் ஆரம்பித்தது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 40,000 ஜற்றோபா தாவரங்கள், தனியார் துறையில் அதிகரித்த பங்களிப்புடன் வளர்க்கப்பட்டன. 2007 ஆம் ஆண்டு முடிவில் தனியார் வர்த்தகக் காடாக்கல் விரிவாக்கமானது 510 எக்டயருக்கு அதிகரித்தது.

**அட்டவணை 2.5 மீன் உற்பத்தி**

மெற்றிக்தொன்கள் '000

| துணைத்துறை | 2006(அ) | 2007(ஆ) |
|---|---|---|
| கடல் (இ) | 216 | 253 |
| பண்ணை மீன் வளர்ப்பும் நன்னீர் மீன்பிடியும் | 35 | 38 |
| மொத்தம் | 251 | 291 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) கரையோர மற்றும் ஆழ்கடல் துறை

மூலங்கள் : கடற்றொழில் நீர்வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு
தேசிய நீரியல் மூலவள ஆராய்ச்சி அபிவிருத்தி முகவர்

## மீன்பிடி

**வருடாந்த மீன் உற்பத்தி 2007இல் முன்னெப்பொழுதுமில்லாத உச்ச மட்டமான 291 மில்லியன் கிலோ கிறாம்களை அடைந்து 16 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்ததுடன் சுனாமியிலிருந்தான முழுமையான மீட்சியைப் பிரதிபலிக்கிறது.** ஆழ்கடல் மற்றும் நன்னீர் மற்றும் அலங்கார மீனின் உற்பத்தி முறையே 17 சதவீதத்தாலும், 9 சதவீதத்தாலும் அதிகரித்தன. இவ்விரு துறைகளில் மீன் உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சி, இத்துறையிலிருந்தான உற்பத்தியை 2007இல் சரித்திரரீதியாக உச்ச மட்டத்திற்கு கொண்டு வந்தது. இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தினால் நேரடியாக கொள்வனவு செய்யப்பட்ட மீன் இருப்புக்களினுடான தலையீடு மற்றும் உயர் உற்பத்தி மற்றும் குளிரூட்டல் வசதிகளைக் கொண்ட இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபன பார வண்டிகள் மற்றும் அவற்றினுடைய விற்பனை நிலயங்களூடான மீனின் பகிர்ந்தளிப்பு போன்ற முக்கிய காரணங்களால் மீன் விலைகள் இவ்வாண்டில் பெருமளவில் மாற்றமின்றி விளங்கின.

**மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.** மீன்பிடி வள்ளங்கள் தங்கி நிற்கக்கூடிய இயலளவை அதிகரிக்கும் முகமாக அம்பாந்தோட்டை, அம்பலாங்கொட மற்றும் சிலாபத்தில் கரையோர மூலவள முகாமைத்துவச் செயற்றிட்டங்களின் கீழ் மீன்பிடித் துறைமுகங்களின் நிர்மாணம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் அதன் இரு நீளமான கலங்களுடன் அதற்குச் சொந்தமான மீன்பிடிக் கலங்களின் எண்ணிக்கையை கூட்டிக் கொண்டதுடன் மீன்பிடிக் கைத்தொழிலை கூடிய போட்டித்தன்மையுள்ளதாக ஏற்படுத்தியது. அவை, ஆழ்கடலில் தொழிற்படும் பல நாள் படகுகளுக்கான போக்குவரத்துத் தேவைப்பாடுகளை வழிப்படுத்துவதற்காக இரு தாய்க் கப்பல்களையும் சேவையில் ஈடுபடுத்தின. சென்ஜோன்ஸ் மீன் சந்தையை பாலியகொடையிலுள்ள கூடிய விசாலமான கட்டடத் தொகுதிக்கு மீள அமைப்பதற்கான திட்டம் நடைமுறையில் இருக்கிறது. சுனாமியால் சேதமடைந்த மீன்பிடித் துறைமுகங்களினை மீளமைத்தல் மற்றும் திருத்தி அமைத்தல் கிட்டத்தட்ட 90 சதவீதம் தற்போது பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. டிக்கோவிற்ற மீன்பிடித் துறைமுகத்தில் முன்மொழியப்பட்ட கட்டடவாக்க வேலை மிக விரைவில் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் துறைமுகம் பூர்த்தியாக்கப்பட்டதும், 340 பல நாள் படகுகளை உள்ளடக்கக் கூடியதாக விருப்பதுடன், நாட்டில் மிகப் பெரிய பல நாள் படகுகளை தங்க வைக்கும் துறைமுகமாகவும் விளங்கும். மீன்பிடித் துறையை மேம்படுத்தும் பொருட்டு, இறால் கைத்தொழிலுக்கு நோய் தொற்றக்கூடிய அபாயத்தை குறைக்க உதவும் தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகாரசபையால் அறுவடை அட்டவணை விருத்தி செய்யப்பட்டது. புத்தளம் மாவட்டத்தில், கூனி இறால் கைத்தொழிலுக்கு உதவுவதற்காக புத்தலலு ஓயாவில் நீரின் தரத்தைக் கண்காணிக்கும் ஆய்வுகூடம் நிறுவப்பட்டது. வெளிநாட்டு நீரியல் வள தாவரங்களுக்கான கேள்வியை நிறைவேற்றல் மற்றும் தொழில் வாய்ப்பு வசதிகளை உருவாக்கும் குறிக்கோளுடன் றம்படகலவில் இழைய விருத்தி ஆய்வுகூடத்தின் நிர்மாணம் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. அநேகமாக நாட்டிலுள்ள சகல துறைமுகங்களும் தற்போது இன்ரநெற் புறொகோல் வோர்ச்சுவல் பிறைவேட் நெற்வேர்க் மூலம் இணைக்கப்பட்டு ஏககாலத்தில் கலங்கள் கண்காணிக்கப்படுகின்றன.

**அரசாங்கம் தேசிய வேளாண்மைக்கான அனைத்தையும் உள்ளடக்கிய கட்டமைப்பொன்றினை பிரகடனம் செய்தது.** இக்கொள்கையின் குறிக்கோள்களாக தேசத்தின் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உள்நாட்டு வேளாண்மை உற்பத்தியை அதிகரித்தல், வேளாண்மை உற்பத்தித்திறனை அதிகரித்து நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சியை உறுதிப்படுத்தல், ஓர் அலகின் உற்பத்திச் செலவைக் குறைக்கும் நோக்கில் முன்னேற்றமடைந்த வேளாண்மைத் தொழில்நுட்பங்களைப் பின்பற்றல் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை ஊக்குவித்தல் மற்றும் வேளாண்மையாளர் சமுதாயத்தின் வருமானத்தையும் வாழக்கைத் தரங்களையும் அதிகரித்தல் என்பனவாகும். இக் கொள்கை உணவுப் பயிர்கள், ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்கள், மலர் வளர்ப்பு மற்றும் செடி வளர்ப்பு என்பவற்றுடன் இணைந்த பிரச்சனைகளை தீர்ப்பதில் கவனம் செலுத்தியது. இது, பெருந்தோட்டப் பயிர்கள், கால்நடை மற்றும் மீன்பிடிகள் மற்றும் நீரியல்வள மூலவளங்களையும் உள்ளடக்குகிறது.

**வேளாண்மையாளர்களின் வருமானத்தையும் வாழ்க்கைத் தரங்களையும் அதிகரித்து வேளாண்மை உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும் பொதுமக்களுக்கு தாங்கக்கூடிய விலைகளில் உணவுப் பயிர்களை கிடைக்கச் செய்வதற்கும் 2007இல் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** இந்நோக்கத்துக்காக,

**அட்டவணை 2.6 விலங்கு வளர்ப்புத்துறை புள்ளி விபரங்கள்**

| துணைத்துறை | 2006(அ) | 2007(ஆ) |
|---|---|---|
| 1. தேசிய விலங்குத் தொகுதி(எண்ணிக்கை) (மில்) | 1.5 | 1.5 |
| கால்நடைகள் | 1.2 | 1.2 |
| எருமைகள் | 0.3 | 0.3 |
| 2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்) | 196.6 | 202.0 |
| பசும்பால் | 165.0 | 169.7 |
| எருமைப்பால் | 31.6 | 32.3 |
| 3. பால் உற்பத்திகள் (மில். லீற்றர்கள்) | 8.6 | 12.1 |
| 4. உற்பத்தியாளர் விலை - பசும்பால் (ரூ/லீற்றர்) | 21.00 | 21.00 |
| 5. தேசிய முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்) | 901.2 | 915.6 |
| 6. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி ('000 மெ.தொ) | 78.8 | 100.1 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள் : தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
வேளாண்மை விலங்கு வளர்ப்பு அமைச்சு

சிறப்புக் குறிப்பு 5


## சிறப்புப் பொருளாதார வலையத்தை பயன்படுத்துவதன் மூலம் உச்சமட்ட நன்மையை பயன்படுத்திக் கொள்ளல்

இலங்கை கடற்கரையோரத்திலிருந்து 200 கடல் தொலைவு மைல்கள் வரை 21,500 சதுர கி.மீற்றர் தன்னாதிக்கமுள்ள கரையோரக் கடற்பரப்பினையும்[1] 517,000 சதுர கி.மீற்றர் சிறப்புப் பொருளாதார வலயத்தை[2] தன்னகத்தே கொண்டுள்ளது. சிறப்புப் பொருளாதார வலயம், பெரும் எண்ணிக்கையில் வைத்திருக்கும் நிலத்தினை 20 தடவைக்கு (அண்ணளவாக 1,400,000 சதுர கி.மீற்றர்) சமமாக இலங்கை உரிமையினை அனுபவிக்க அனுமதி வழங்கக் கூடியதாக நாட்டின் கண்ட எல்லைகளை[3] மேலும் விரிவாக்குவதற்கு எதிர்பார்க்கின்றது. இவ்வுரிமை இலங்கைக்கு இயற்கை வளங்களை கண்டு பிடித்து பயன்படுத்துவதற்கும் பொருளாதார நடவடிக்கைகளை வலுவான முறையில் நடத்துவதற்கும் சட்ட ரீதியான உரிமையை கொடுக்கின்றது.

தற்போது கிடைக்கக்கூடிய தரவுகளின்படி, இலங்கை சட்ட ரீதியாகவுள்ள சமுத்திரப் பரப்பு செறிவான உயர் வளங்களை பெருமளவில் கொண்டுள்ளது. கண்டத் திட்டுக்கள் மட்டும் ஆண்டிற்கு 180,000 மெ.தொன்னிற்கு மேற்பட்ட மீனினை வழங்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. ஆழ்கடல்/ கரைகடந்த பிரதேசங்களில் இன்னமும் பெருங்கடல் உணவு மீன்வகை மற்றும் பல்வேறுபட்ட மீன் வகைகள் வருமானத்தை உயர்த்தும் விதத்தில் இன்னும் சரியான முறையில் பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றன. இலங்கை பெருங்கடல் உணவு மீன் வகையினை எளிதில் அணுகக் கூடியதாக இந்து சமுத்திரத்தின் மத்தியில் உபாய ரீதியான இடத்திலும் யப்பான் மற்றும் ஐரோப்பிய நுகர்வோர் சந்தையை அடையும் விதத்திலும் இலங்கை உபாய ரீதியான அமைவிடங்களில் இருப்பினும் உச்சளவில் ஆழ்கடல் வளங்களை நாடு பயன்படுத்தக் கூடியதாகவிருக்கவில்லை. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு மீன்பிடித் துறையின் பங்களிப்பு மலேசியாவின் 6.2 சதவீதத்துடனும் நியூசிலாந்தின் 5.3 சதவீதத்துடனும் ஒப்பிடும் போது இலங்கையில் 1.1 சதவீதமாகக் காணப்பட்டது. இலங்கை அதனுடைய

**வரைபடம் - சி.கு. 5.1[அ]**

**இலங்கையின் கரையோரம் மற்றும் கடல் வலயம்**




மூலம்: தேசிய நீரியல் மூலவளங்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர்

(அ) மேலேயுள்ள படம் இலங்கையின் கரையோரம் மற்றும் கடல் வலயத்தைக் காட்டுகிறது. இலங்கையைச் சுற்றி 12 மீன்பிடி துறைமுகங்கள் காணப்படுகின்றன. அவையாவன: முகத்துவாரம், பாணந்துறை, பேருவளை, கிக்கடுவ, காலி, மிரிஸ, பிறண்வல்ல, குடாவல்ல, தங்காலை, கிரிந்த, திருகோணமலை மற்றும் கற்பிட்டி. அம்பாந்தோட்டை, அம்பாலங்கொடை மற்றும் சிலாபம் துறைமுகங்களின் கட்டுமானப் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

கடற்கரையோர மீன்பிடி வளங்களை ஆகக்கூடிய நீடித்து நிலைத்திருக்கக்கூடிய விளைவு வீதங்களில் நெருக்கமாகப் பயன்படுத்திக் கொண்டிருப்பினும் ஆழ்கடல் வளங்கள் பாரியளவில் பயன்படுத்தப்படாமல் அல்லது சட்ட ரீதியற்ற முறையில் வெளிநாட்டுக் கப்பல்களினால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஆகவே, ஆகக் கூடுதலான நாட்டிற்குச் சொந்தமான உச்சமட்ட உள்ளார்ந்த வளங்களை பயன்படுத்திக் கொள்வதற்கு முக்கியமான உபாயங்களை அமைத்துக் கொள்வது முக்கியமானதாகும்.

இந்துசமுத்திரத்தில் இலங்கை நிலப்பரப்பில் உயர்ந்தளவில் உயிர்வாழ் யநிலங்கள் கிடைக்கக்கூடியதாக இருப்பதற்கு புறம்பாக, அது கனிப்பொருள் மற்றும் கைட்ரோ காபன் வளங்கள் வர்த்தக ரீதியாக பயன்படுத்துவதற்கேற்ற விதத்தில் பாரியளவில் கொண்டிருக்கும் என நம்பப்படுகின்றது. கண்ட திட்டுக்களில் தைத்தானியம், சைக்கோனியம், தோறியம், பொட்டாசியம் போன்றவற்றைக் கொண்ட படிவுகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமான படிவுகளாக கோபால்ற், நிக்கல், செம்பு மற்றும் மக்னீசியம் போன்ற உலோகங்கள் கண்டத்திற்குரிய மேற்பரப்பில்[4] கண்டறியப்பட்டள்ளன. மேலும் குறிப்பாக மன்னார் மற்றும் காவேரிப் படுக்கைகளில் கண்ட மணல் திட்டுக்களின் வெளிப்புறப்பகுதிகளில் கைட்ரோ காபன் படிவுகள் காணப்படுகின்றன.

மேலும், வெளிநாட்டு வருமானத்தை இலக்காகக் கொண்டு படகோட்டம், கப்பல் பயணங்கள், திமிங்கலம், டொல்பின் கவனிப்புகள், ஆழ்கடல் சுழியோடல், கடல் உல்லாசம் மற்றும் கடல் பொழுது போக்கு போன்ற சமுத்திர விளையாட்டு உருவாக்க வசதிகளை இன்னமும் இலங்கையில் மேம்படுத்த முடியும். சில நடவடிக்கைகள் சிறியளவில் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டிருப்பினும் பாரியளவில் இந்நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல் மற்றும் அதன் மூலம் புதிய தொழில் வாய்ப்புக்களும் வெளிநாட்டுச் செலாவணியை உழைப்பதற்கும் பெருமளவு உள்ளார்ந்த வளங்கள் காணப்படுகின்றன.

பொருளாதாரத்தில் மீன்பிடித்துறையில் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு மீன்பிடித்துறையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மாதிரியில் மாற்றம் ஒன்று தேவைப்படுகின்றது. இச்செயற்பாட்டில் தேவையான உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்தல், வளங்களை மதிப்பீடு செய்தல், சொத்துரிமையை நிறுவுதல், ஒழுங்குவிதிகள், சட்டக் கட்டமைப்பு, அனுமதிப் பங்கு முகாமைத்துவ முறை மற்றும் கரையோரப் பாதுகாப்பு முறை போன்றவை முக்கியமானவையாக போதுமானதற்ற முறையான உட்கட்டமைப்பு முறை ஆழ்கடல் வளங்களை சரியாக பயன்படுத்தலுக்கு தடையாகவுள்ளது. நாட்டில் 12 மீனபிடித் துறைமுகங்கள் தொழிற்பாட்டிலுள்ள வேளையில் 3 நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இதற்கு மேலதிகமாக 35 நங்கூரமிட்டு தங்கும் இடங்களும் மற்றும் 600 சிறிய மீன்பிடி நிலையங்களும் காணப்படுகின்றன. எப்படியாயினும், சிறப்புப் பொருளாதார வலயத்தின் வளங்களைப் பயன்படுத்தத் தேவைப்படுகின்ற ஆழ்கடல் கலம்களை கையாள்வதற்கேற்ற இயலளவை முகத்துவாரம் மீன்பிடித் துறைமுகத்தைத் தவிர மற்றையவை எவையும் கொண்டிருக்கவில்லை. இப்பிரச்சனையை கட்டுப்படுத்தும் விதத்தில் ஒல்லாந்து அரசாங்கத்தின் உதவியுடன் டிக்கோவிற்றவில் புதிய மீன்பிடித் துறைமுகத்தை கட்டுவதற்கு அட்டணையிடப்பட்டிருக்கிறது. உத்தேசிக்கப்பட்ட துறைமுகத்தினை இப்பிராந்தியத்தின் மிகப் பெரிய துறைமுகமாக மாற்றும் விதத்தில் 1,100 மீற்றர் நீர்ப்பிரிப்பினால் சூழப்பட்ட 13 கெக்டேயர் துறைமுக பரப்பில் 340 பல நாட் படகுகளுக்கு வசதியளிக்கும் இயலுமையைக் கொண்டிருக்கும் விதத்தில் அமைக்கப்படவுள்ளது. இச்செயற்றிட்டத்தின் குறிப்பிடத்தக்க நன்மையாதெனில் இது, இலங்கையின் தெற்கு பகுதிக்கு அருகில் பன்னாட்டு நீர் வழிக்கு அண்மையில் அமைந்திருப்பதேயாகும். இது வெளிநாட்டு இழுவைப்படகு வந்து போவதற்கான வசதிகளையும் வழங்கும்.

முதலீட்டின் அளவு மற்றும் இயற்கை வளப் பயன்பாட்டின் செறிவு என்பவற்றை தீர்மானிக்கையில் இலங்கை நீரில் கடல் சார்ந்த மீன் வளங்களின் அளவீடொன்று தேவைப்படுகின்றது. தேசிய நீரியல் வளங்களை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர், ஐஸ்லாந்து அபிவிருத்தி முகவருடன் பிடிக்கப்பட்ட மீன்களின் தரவுகளைப் பயன்படுத்தி மீன் இருப்பினை மதிப்பிடுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது. தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உணவு வேளாண்மை அமைப்பு தெரிந்தெடுத்த பிடிக்கப்பட்ட மீன் வகைகளின் மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு திட்டமிட்டிருந்தது.

சிறப்புப் பொருளாதார வலயத்தின் பயன்பாட்டினை அதிகரிப்பதற்குத் தேவையான இன்னொன்று யாதெனில் சமுத்திரம் சார்ந்த மீன்பிடி முகாமைத்துவத்தை மேம்படுத்துவதாகும். ஆகவே, மற்றைய நாடுகளின் இணக்கப்பாட்டுடன் சிறப்புப் பொருளாதார வலயத்திலுள்ள இலங்கையின் வளங்களை பாதுகாத்தல் தொடர்பாக பொருத்தமான சட்டம் மற்றும் ஒழுங்குகளை ஏற்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். மேலும், சிறப்புப் பொருளாதார வலயத்தில் மீன் வளங்களின் பயன்பாட்டின் பொருட்டு தனியார் துறையின் ஒத்துழைப்புடன் சிறப்பான

முகாமைத்துவ முறையை நிறுவுதல் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. சிறப்புப் பொருளாதார வலயம் பல்வேறு மீன்பிடி இடங்களாக பிரிக்கப்பட்ட பின்னர் அனுமதி பங்கு முகாமைத்துவ முறைமையை நிறுவுவதற்கும் ஒவ்வொரு இடங்களிலும் ஆகக் கூடுதலான வலுவான மீனைப் பிடிப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. கம்பனிக்கான பிராந்தியத்தில் நன்மைகளை பெறுவதற்கு அவர்களை அனுமதிக்கும் விதத்தில் அவர்களுக்கு வேறுபட்ட அனுமதி பங்கு பிராந்தியங்களை ஒதுக்க முடியும். இம்முறையானது கம்பனித்துறை குறித்துரைக்கப்பட்ட பிரதேசத்தில் வலுவான முறையில் மீள்வளங்களைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் நிறுவப்பட வேண்டிய வேளையில் கரையோர வலயத்தில் ஒரு நாள் படகுத் தொழிற்பாட்டாளர்களில் உரிமைகளையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மீன்பிடித்தல், மீனைக் கையாளுதல், சேமித்தல், சந்தைப்படுத்தல் போன்றவற்றில் புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவது உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்த முக்கியமானதாகும். மீன் பிடிக்கப்பட்ட பின்னர் ஏற்படும் இழப்பு மிக உயர்வாக 30 சதவீதமாகக் காணப்படுகின்ற கரைகடந்த மற்றும் ஆழ்கடல் மீன்பிடி மற்றும் பண்ணை மீன் வளர்ப்பு என்பனவற்றினால் பொறுத்தவரை துறைமுகம் மற்றும் மீன்பிடிக்குப் பின்னரான தொழில்நுட்பம் என்பன மிக முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகவுள்ளன. குறிப்பிடத்தக்களவிற்கு இலாபத்தை வழங்கக்கூடிய ஆழ்கடல் மீன்பிடியினை ஊக்குவிப்பதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மற்றும் இணைந்த தொழில் முயற்சிகளிலிருந்தான முதலீடு தேவைப்படுகின்றது. மீன்பிடிக் கைத்தொழில் அபரிமிதமான உள்ளார்ந்த வளம் காணப்படுவதனால் கம்பனித்துறை இக்கைத்தொழிலில் மிகுந்த கவனத்தினைச் செலுத்துகின்ற உச்சநேரம் இதுவாகும்.

வேளாண்மைத் திணைக்களம் 2007இல் பல எண்ணிக்கையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள், விரிவாக்கப் பணிகள், விதை உற்பத்தி, உறுதிப்படுத்தல் மற்றும் பயிர் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. உப்புத்தன்மை மற்றும் இலைப் பற்றீரியா நோய்க்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய புதிய அரிசி வகைகள் உயிரியல் தொழில்நுட்ப கருவிகளைப் பயன்படுத்தி விருத்தி செய்யப்பட்டன. வெடிப்பு நோய்க்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய தோடம்பழத்தின் புதிய வகை (வலேனிக்கா), நாரத்தம் பழம், மக்கடெமியாவின் இரு வகைகள் மற்றும் டில்கொரியா (இராசவள்ளிக் கிழங்கு, கரணைக் கிழங்கு) மற்றும் வரகு என்பன 2007இல் உற்பத்திசெய்யப்பட்டன.

**வரவு செலவுத்திட்டம் 2008 உள்நாட்டு பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பல வழி முறைகளை முன்மொழிந்தது.** பால் உற்பத்தியாளர்களுக்கு செலுத்தப்படும் உத்தரவாத விலை லீற்றர் ஒன்றுக்கு ரூ. 30 - 40 வரையில் அதிகரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இத்துடன், கறவைப் பசுக்களின் இறக்குமதி, விலங்கு வளர்ப்பை அபிவிருத்தி செய்தல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பால் பதனிடப்படும் நிலையங்களை அமைப்பதற்காக சலுகை வீதங்களில் கொடுகடன் வசதிகள் முன்மொழியப்பட்டன. உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பாலைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பால் மற்றும் பால் உற்பத்திகளுக்கு 2008 சனவரி 1 இலிருந்து பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. வடக்கு, வடமத்திய, தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களில் 50,000 இற்கும் கூடுதலான கால்நடைப் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்காக சலுகை ரீதியிலான கடன்களை வழங்குவதற்கு நிதியங்கள் ஒதுக்கப்பட்டன. கறவைப் பசு ஒன்றை இறைச்சிக்காக வெட்டப்படுவதற்கான தண்டனையை ரூ.250 இலிருந்து ரூ.50,000 இற்கு அதிகரிப்பதன் மூலம் கறவைப் பசுக்களை இறைச்சிக்கு வெட்டுதல் மீதான சட்ட விதிகள் பலப்படுத்தப்பட்டன. வரவு செலவுத்திட்டம் 2008 மாகாண மட்டத்தில் குளிரூட்டி களஞ்சியப்படுத்தும் வசதிகள் மற்றும் பால் சேகரிப்பு நிலையங்களை நிறுவுவதற்காக ரூ.100 மில்லியனை ஒதுக்கியது. நுகர்வோருக்கு உடனடி பசுப்பாலை கிடைக்கச் செய்வதற்கும், பல நகரங்களில் பசுப்பாலைப் பிரபல்யப்படுத்துவதற்கும் பல நகரங்களில் பால் விற்பனை நிலையங்கங்களை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**விதை, மற்றும் தாவரப் பொருட்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியை கிடைக்கச் செய்வதில் இறக்குமதிகளிலிருந்து பாதுகாப்பை வழங்குவதன் மூலம் உள்நாட்டு வேளாண்மை உற்பத்தியைத் தூண்டுவதற்கு வரவு செலவுத்திட்டம் 2008 ஊக்குவிப்புக்களை நீடித்தது.** அப்பி வவமு - றட்ட நகமு (பயிர் செய்து அபிவிருத்தி செய்வோமாக) மூன்று ஆண்டு நிகழ்ச்சித்திட்டம், வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதற்கும், நீடித்து நிலைத்திருக்கும் உணவு உற்பத்தியை முழுமையாக அடைவதற்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், உள்நாட்டுச் சீனி மற்றும் அரிசியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளுக்கு 2008 சனவரி 1இலிருந்து பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.

**வளமாக்கி உதவுதொகைத் திட்டம் 2007இலும் தொடர்ந்தது.** நெற் பயிர்ச் செய்கைக்கான சகல வகை வளமாக்கியும் 50 கிலோக்கிராம் உறையொன்று ரூ.350 இற்கு கிடைக்கக் கூடியதாகவிருக்கையில், 5 ஏக்கருக்கும் குறைவான தேயிலை, இறப்பர் மற்றும் தெங்குக் காணிச் சொந்தக்காரர்களுக்கு 50 கிலோ கிறாம் யூரியா ரூ.1,200இல் சலுகை வீதத்தில் வழங்கப்பட்டது. வளமாக்கி உதவுதொகை 2007ல் ரூ.11,000 மில்லியனாக விளங்கியதுடன் 2008 இற்கான ஒதுக்கீடு ரூ.15,000 மில்லியனாகும். இதேவேளை, சேதனப் பசளையின் பயன்பாட்டை பிரபல்யப்படுத்துவதற்கு அரசு நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்ததுடன் 2008இல் சேதனப் பசளையின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு ரூ.500 மில்லியனை ஒதுக்கியது. எனினும், வரவு செலவுத்திட்டம் மீதான சுமையைக்

குறைப்பதற்கும், அதுபோல் பயிர்களிடையே வளமாக்கிப் பகிர்ந்தளிப்பை நடைமுறைப்படுத்துவதற்கும் அதிகரித்துச் செல்லும் உற்பத்திகளின் விலைகளைக் கருத்திற் கொண்டு தற்போதைய வளமாக்கி உதவுதொகைத்திட்டம் ஒழுங்குமுறைப்படுத்தமுடியும்.

**உள்நாட்டுத் தேவை மற்றும் ஏற்றுமதிக் கேள்வியை எதிர் கொள்வதற்கு 2010 அளவில் தற்போதைய அளவான பழ உற்பத்தியை 1 மில்லியன் தொன்களுக்கு அதிகரிப்பதற்கு அரசு எதிர்பார்க்கிறது.** சூழலுக்குச் சிநேக பூர்வமான வர்த்தகப் பண்ணைகளின் அபிவிருத்தி மற்றும், மாறுபட்ட சூழலிலும் தொடர்ந்து உற்பத்தி செய்யக்கூடிய தன்மை மற்றும் பதனிடல் தொழில்நுட்பங்கள் அதுபோல் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் இவ் இலக்கை எய்த உதவும். விரிவாக்கப் பணிகளை ஊக்குவித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, உட்கட்டமைப்பு வசதிகளிலான மேம்பாடு, தனியார்துறை பங்களிப்பை ஊக்குவித்தல், பன்னாட்டுச் சந்தைக்கான பழங்களின் வகைகளை இனங்காணல், உணவுப் பாதுகாப்பை அதிகரித்தல், தரம் மற்றும் நியமங்கள், சிறந்த வேளாண்மை நடைமுறைகளைப் பின்பற்றல் மற்றும் பழங்களைப் பாதுகாக்கும் முறைகளை ஊக்குவித்தல் என்பனவும் பழக் கைத்தொழிலை ஊக்குவிக்க உதவும்.

**மிளகாய், தட்டைப் பயறு மற்றும் சோளம் போன்ற ஏனைய களப் பயிர்களின் உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கு பாரிய உள்ளார்ந்த வளம் காணப்படுகிறது.** வேளாண்மையாளர்கள் ஏனைய களப் பயிர்களின் பயிர்ச் செய்கையிலிருந்து உயர் நிதியியல் இலாபங்களைப் பெற்ற போதிலும், தற்போதைய உற்பத்தி அளவு பல காரணங்களால் தேசிய கேள்வியைக் கூட எதிர்கொள்ள போதுமானதாகவில்லை. குறைந்த உற்பத்தித்திறன், உயர் உற்பத்திச் செலவு, தரக் குறைவான நிலங்கள், தரமான விதைகள் கிடைக்காமை, பரவலான பயிர்ச்செய்கை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத சந்தைப்படுத்தல் முறைமை என்பன ஏனைய களப் பயிர்கள் துறையிலான முக்கிய பிரச்சனைகளாகும். உயர் விளைவு

அட்டவணை 2.7

கைத்தொழிலில் கூட்டப்பட்ட பெறுமதி (நிலையான 2002 விலைகளில்)


| வகை | ரூபா மில்லியன (%) | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|
| | 2006 | 2007(அ) | 2006 | 2007(அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 155,842 | 165,242 | 5.8 | 6.0 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 78,870 | 85,402 | 4.0 | 8.3 |
| 3. மரம், மர உற்பத்திகள் | 1,026 | 1,109 | 4.2 | 8.1 |
| 4. தாள் உற்பத்திகள், வெளியீடு, அச்சுப்பதிப்பு | 1,385 | 1,533 | 6.5 | 10.7 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 51,714 | 55,247 | 8.0 | 6.8 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 13,687 | 14,445 | 10.9 | 5.5 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 906 | 930 | 2.4 | 2.6 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவி | 28,378 | 29,911 | 4.3 | 5.4 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 1,564 | 1,792 | 7.5 | 14.6 |
| மொத்தம் | 333,372 | 355,611 | 5.7 | 6.7 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

வரைபடம் 2.3

கூட்டப்பட்ட பெறுமதியின் கைத்தொழில் உள்ளமைப்பு - 2007 (2002 நிலையான விலையில்)




வீதத்தைக் கொண்ட வகைகள் போதுமானதளவில் கிடைக்காமை, கிராம மட்டத்தில் போதுமானதற்ற தொழில்நுட்ப மாற்றல், மழை நீரில் கூடியளவு தங்கியிருத்தல், பூச்சிகள் மற்றும் நோய்கள் உயர் அளவில் ஏற்படல், மோசமான மண் வள முகாமைத்துவம், போதுமானதற்ற பண்ணை பொறிமுறைப்படுத்தல், வேளாளர் மட்டடத்திலான உள்ளீட்டு வழங்கல் பொறிமுறைகள் பற்றாக்குறை, பற்றாக்குறையான களஞ்சியப்படுத்தல் வசதிகள், மோசமான பதனிடல் வசதிகள் மற்றும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் மற்றும் ஏனைய களப் பயிர்களின் உற்பத்தியைக் கவனிக்காது அரிசிக்கு உயர் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டமை என்பன ஏனைய களப்பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு தீர்க்கப்பட வேண்டிய முக்கிய தடைகளாகும்.

**வேளாண்மைத்துறையில் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்குமான தேவையை மேலும் வலியுறுத்துவது அவசியமானதாகும்.** இக்குறிக்கோள்களை எய்துவதற்கு கேள்வியினால் உந்தப்பட்ட ஆராய்ச்சிகளை அதிகரித்தல், அத்தகைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு போதுமான மூலவளங்களை ஒதுக்குதல், கலப்பான வர்க்கங்களின் பயன்பாடு போன்ற புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தல், விதந்துரைக்கப்பட்ட மட்டத்தில் வளமாக்கிகளைப் பிரயோகித்தல், சந்தைப்படுத்தலுக்கான வசதிகள் உட்பட போதுமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், விரிவாக்கப் பணிகளை மேலும் அதிகரித்தல் என்பன தேவைப்படுகின்றன. வேளாண்மையாளர்களுக்கு அறிவூட்டுவதற்கு தொழில்நுட்பம், பொருளாதாரம் மற்றும் சூழல் தொடர்பான தகவல்களைப் பரப்புதல் அவசியமானதாகவுள்ள வேளையில், அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களைக் குறைப்பதற்கும், முதிர்ச்சியற்ற அறுவடைகளைத் தடுப்பதற்கும் பொருத்தமான வழிமுறைகள் தேவைப்படுகின்றன. வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கின்ற சமகாலத்தில் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை சமகாலத்தில் அபிவிருத்தி செய்வது கிராமிய மக்கள் தொகையினருக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கி ஆண்டு முழுவதும்

அவர்களை தொழிலொன்றில் ஈடுபடச் செய்யும். இது வேளாண்மையாளர்கள் அவர்களது உற்பத்திக்கு உறுதியான விலை கிடைப்பதனை உறுதி செய்யும்.

## கைத்தொழில்

**கைத்தொழில் துறை முன்னைய ஆண்டின் 8.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் பெறுமதி கூட்டல் நியதிகளில் 7.6 சதவீதத்தால் விரிவடைந்தது.** இவ் வளர்ச்சி நான்கு துணைத் துறைகளான சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல், தயாரிப்பு, மின்வலு, வாயு மற்றும் நீர், மற்றும் கட்டடவாக்கம் என்பவற்றின் சாதகமான பங்களிப்பூடாக எய்தப்பட்டது. மொத்த மொ.உ.உ இன் 17.7 சதவீத பங்கிற்கு வகைகூறும் தயாரிப்புத் துணைத் துறையுடன் கைத்தொழிற்துறையின் பங்கு 28.5 சதவீதத்துக்கு சிறிதளவால் அதிகரித்தது.

**மொத்த கைத்தொழில் வெளியீட்டில் 55 சதவீதத்துக்கும் கூடுதலாக வகைகூறும் தயாரிப்புத்துறையின் மிகப் பெரிய துணைத்துறையான தொழிற்சாலைக் கைத்தொழில் 2006 இல் பதிவு செய்யப்பட்ட 5.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2007 இல் 6.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** தொழிற்சாலைக் கைத்தொழில் துணைத் துறைகளினுடைய வகைகள் சகல முக்கிய துணைத் துறைகளும், அதாவது உணவு, பானம், புகையிலை உற்பத்திகள், புடைவை, தைத்த ஆடை மற்றும் தோல் உற்பத்திகள் இரசாயனங்கள், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள், மற்றும் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறி மற்றும் போக்குவரத்துக் கருவி என்பன 2007இல் இவ்வளர்ச்சிக்கு உதவின. உயர் எண்ணெய் விலைகள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலான சாதகமற்ற பாதுகாப்பு நிலைமை, தீவிரமான உலக போட்டிக்கு மத்தியில் ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரம் மெதுவடைந்தமை என்பன 2007இல் தொழிற்சாலைக் கைத்தொழில்களால் எதிர்கொள்ளப்பட்ட சில முக்கிய தடைகளாக விளங்கின.

**2007இல் கைத்தொழில்துறை வெளியீடு ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தை இரண்டையும் நோக்காகக் கொண்ட கைத்தொழில்களால் உந்தப்பட்டது.** முதலீட்டுச் சபை மற்றும் முதலீட்டுச் சபையல்லா கைத்தொழில்களை உள்ளடக்கியுள்ள தனியார்துறை, தொழிற்சாலைக் கைத்தொழில் வெளியீட்டின் 96 சதவீதத்திற்கும் கூடுதலான பங்குக்கு வகை கூறி தொடர்ந்தும் வெளியீட்டின் விரிவாக்கத்தில் முக்கிய பங்கை வகித்தது.

**நாட்டின் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 75 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்கு வகைகூறிய ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள், சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் ஐரோப்பிய சமூகத்தால் வழங்கப்பட்ட முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை என்பவற்றின் கீழ் பெற்ற நன்மைகளுடன் சிறப்பாகச் செயலாற்றின.** தைத்த ஆடைப் பொருட்கள், டயர்கள் மற்றும் கையுறைகள் உட்பட்ட இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணங்கள், இலத்திரனியல் கருவிகள், மட்பாண்ட உற்பத்திகள் மற்றும் வைரப் பொருட்கள் போன்ற முக்கிய ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் ஏற்றுமதித் துறையினுள் சிறப்பாகச் செயலாற்றின. பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டம் வர்த்தக இராஜதந்திரம், சந்தை சேருமிடங்களை விரிவாக்கல், தரத்திலான முன்னேற்றம் மற்றும் வர்த்தக அடையாள ஊக்குவிப்புச் செயற்பாடுகள் மூலம் ஏற்றுமதியை மேம்படுத்த அரசாலும், முக்கிய கைத்தொழிலாளர்களாலும் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப முயற்சிகளுடாகக் கிடைக்கத்தக்க அதிகரித்த சந்தை நுழைவின் மூலம் தொடர்ந்து ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் நன்மையடைந்தன.

**உள்நாட்டுச் சந்தை சார்ந்த கைத்தொழில்களும் அரசின் பிராந்திய கைத்தொழில் மயமாக்க நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அரசால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய ஆரம்ப நடவடிக்கைகளால் நன்மையடைந்து 2007இல் சிறப்பாகச் செயலாற்றியது.** அரசு பெறுமதிசேர்வரி, ஏனைய வரி மற்றும் தீர்வைச் சலுகைகளை வழங்கி, பிராந்திய கைத்தொழில்மயமாக்கத்துக்கு நேரடி நன்மைகளைக் கொண்டிருக்கும் பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியதுடன் செயலாற்றாத தொழிற்சாலைகளைப் புதுப்பிப்பதற்கான நடவடிக்கையையும் ஆரம்பித்தது. குறிப்பாக, வீடமைப்பு மற்றும் கடைத்தொகுதிக் கட்டடங்களில் நிர்மாணச் செயற்பாடுகளிலான விரிவாக்கமும் உள்நாட்டுச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களின் வளர்ச்சி உத்வேகத்துக்கு உதவியது. உணவு மற்றும் பானங்கள், சிமெந்து, கட்டடப் பொருட்கள், மட்பாண்டங்கள், தளபாடம் மற்றும் ஏனைய மர உற்பத்திகள், அச்சிடல் மற்றும் பொதியிடல் பொருட்கள் 2007இல் உள்நாட்டை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களின் முக்கிய தூண்டுநர்களிடையே காணப்பட்டன.

**ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களின் முக்கிய துணைத் துறையாக விளங்கிய புடைவை, தைத்த ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள், நாட்டின் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 43 சதவீதத்துக்கும் வகைகூறி 2006இல் பதிவு செய்யப்பட்ட 4.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2007இல் 8.3 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இவ்வகையின் மேம்பட்ட செயலாற்றம் பெரும்பாலும் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தீர்வைச் சலுகையால் உதவப்பட்ட ஏற்றுமதிச் செயற்பாடுகளின் விரிவாக்கத்தினூடாக அடையப்பட்டது. இதேவேளை, தைத்த ஆடையை உற்பத்தி செய்வோர் ஆடைக் கைத்தொழில் புத்தாக்கத்தில் ஆடைக் கைத்தொழிலை முன்னணியில் வைத்திருப்பதற்கு ஈ-பிற் மென்பொருள் போன்ற பல நவீன மென்பொருள்களைப் பாவித்தனர். கைத்தொழிலுக்கான முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட பணிகளையும் அபிவிருத்தி செய்வதற்காக ஒரு இடத்திலேயே எல்லாவற்றையும் கொள்வனவு செய்யும் கடையை நிறுவுவதற்கு ஆடைக் கைத்தொழில் ஏனைய பல வழிமுறைகளையும் எடுத்துள்ளது. ஆடைக் கைத்தொழிலால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய ஆரம்ப நடவடிக்கையான "குற்றமற்ற ஆடை" நீதிவழுவாத தயாரிப்பு மற்றும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தியில் கவனஞ் செலுத்தி, சிறுவர்களைத் தொழிலுக்கமர்த்தல் மற்றும் கட்டாயப்படுத்தி தொழிலுக்கமர்த்தல் என்பவற்றில்

ஈடுபடமாட்டோம் என்பதை உள்ளடக்கிய நீதிவழுவாத தொழில்புரியும் நடைமுறைகளுக்கான கடப்பாட்டை உறுதி செய்கிறது. புத்தாக்க உற்பத்திகளை வழங்கும் அறிவுசார் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட ஆடைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதில், கைத்தொழில் அதன் தொழிற்படையை செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் ஏனைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களூடாக கற்பிக்கும் வேளையில் அதை நவீனமயமான பணிவழங்குனராக உருமாற்றுகிறது. ஆடைக் கைத்தொழில், சமூக ரீதியாக பொறுப்பு வாய்ந்த வியாபார நடைமுறைகளை ஊக்குவிக்கும் உலக வர்த்தக சந்தை இயக்கத்துடன் இணைப்புகளையும் நிறுவியுள்ளது. இவ்வியக்கம் ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய சமூகத்தின் உத்வேகத்தை அடைந்ததுடன் கூடிய எண்ணிக்கையான நுகர்வோர் குற்றமற்ற வர்த்தக நடைமுறைகள் பற்றி கூடியளவுக்கு கற்பிக்கப்பட்டனர்.

**இலங்கையில் ஆடைக் கைத்தொழிலுள்ள முக்கிய பங்கேற்பாளர்கள் பன்னாட்டுச் சந்தைக்கு உலகப்பிரசித்தி பெற்ற வர்த்தக அடையாளம் கொண்ட பொருட்களை தொடர்ந்து வழங்கியதுடன் இவ்வுற்பத்தியாளர்கள் உலகத்திலுள்ள சிறந்த வர்த்தக அடையாளங்களால் புதியவற்றை வழங்கும் வழங்குநர்களாக இனங் காணப்பட்டுள்ளனர்.** சீத்தைகளின் உள்நாட்டு வழங்கல் தொடரின் அபிவிருத்தியுடன், ஆடைகள் கைத்தொழில் குறைந்த இடைவேளி நேரம், உள்ளார்ந்த வளமான செலவுச் சேகரிப்புக்கள், தொழில்நிலை உருவாக்கம் மற்றும் மேலதிக முதலீடுகளிலிருந்து நன்மையடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. முன்பு துல்கிரிய கைத்தொழில் பேட்டையாக விளங்கிய மாஸ் சீத்தை கைத்தொழிற்பேட்டை தனியார்துறை பங்கேற்புடன் மீளத் திறக்கப்பட்டதுடன் ஆடைக் கைத்தொழிலுக்கு துணைக் கருவிகளை வழங்குவதன் மூலம் ஆடைக் கைத்தொழிலின் பின்நோக்கிய ஒருங்கிணைப்பைப் பலப்படுத்தியது. திண்மக் கழிவு முகாமைத்துவத்துடன் சேர்ந்து வலு மற்றும் நீரின் நுகர்வை குறைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலான பசுமைப்படுத்தும் ஆரம்ப நடவடிக்கைகள் ஆடைக் கைத்தொழிலால் கவனஞ் செலுத்தப்படும் முக்கிய துறையாக வந்துள்ளது. உலகம் வெப்பமடைவதைக் கருத்திற் கொண்டு பாரிய தயாரிப்பாளர்களால் கரிப்பொருள் அடிச்சுவட்டைக் குறைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. சூழல் மாசடைவதைக் குறைப்பதற்காக கைத்தொழிலால் தூய்மையான உற்பத்தித் தொழில் நுட்பங்கள் மற்றும் கழிவு முகாமைத்துவ முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

**உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள் வகை உள்நாடு மற்றும் ஏற்றுமதிச் சந்தை அபிவிருத்திகளிலிருந்து நன்மையடைந்து 2007இல் 6.0 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** விசுக்கோத்துகள், ஐஸ்கிறீம், வெதுப்பக உற்பத்திகள், பதனிடப்பட்ட மற்றும் தகரத்தில் அடைக்கப்பட்ட பழங்களும் மரக்கறிகளும், தெங்கு உற்பத்திகள், வனஸ்பதி என்ற தாவர எண்ணெய், மென்பானங்கள் மற்றும் கனிய நீர் கைத்தொழில்கள் உள்ளடங்கலான பதனிடப்பட்ட உணவு மற்றும் பானங்கள் 2007இல் இவ்வகையின் வளர்ச்சிக்கான முக்கிய தூண்டுநர்களாக விளங்கின. உணவு பதனிடல் மற்றும் பானக் கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள முக்கிய பங்கேற்பாளர்கள், அதிகரித்த உள்நாட்டுக் கேள்வியை எதிர் கொள்வதற்கு 2007இல் இயலளவு விரிவாக்கத்துக்கான முதலீட்டை அதிகரித்தனர்.

**இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்கள் வகை, சகல துணைவகைளின் சிறந்த செயலாற்றத்தால் உதவப்பட்டு 2007இல் 6.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இறப்பரை அடிப்படையாகக் கைத்தொழிலின் முக்கிய பங்கேற்பாளர்கள் பன்னாட்டு மற்றும் உள்நாட்டுச் சந்தைகளுக்காக உருக்கு வளையங்களான றேடியல் டயர்கள் உள்ளிட்ட பல உற்பத்திகளை அறிமுகப்படுத்தி ஊக்குவித்தது. வர்த்தக உடன்படிக்கைகளூடாக கிடைக்கத்தக்க உள்ளார்ந்த வளமான ஏற்றுமதிச் சந்தைகளை கவனத்திற் கொண்டு டயர் கைத்தொழிலில் புதிய பங்கேற்பாளர்கள் தோற்றம் பெற்றனர். 2007இல் ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தைகள் இரண்டிலும் கைத்தொழில் மற்றும் மருத்துவ கையுறைகளுக்கான அதிகரித்த கேள்வியுடன் இறப்பர் கையுறைகள்

**அட்டவணை 2.8**

**முதலீட்டுச் சபையல்லா தனியார்துறைக் கைத்தொழில்களின் தொழிற்சாலை இலாப விகிதங்கள் (அ)**

| வகை | மொத்த உற்பத்திச் செலவு (ரூபா மில்லியன்) | | உற்பத்தியின் மொத்தப் பெறுமதி (ரூபா மில்லியன்) | | தொழிற்சாலை இலாப விகிதம் (சதவீதம்) | |
|---|---|---|---|---|---|---|
| | 2006(ஆ) | 2007(இ) | 2006(ஆ) | 2007(இ) | 2006(ஆ) | 2007(இ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 94,864 | 106,351 | 111,298 | 125,117 | 14.8 | 15.0 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 24,353 | 27,035 | 27,865 | 31,022 | 12.6 | 12.9 |
| 3. மரம், மர உற்பத்திகள் | 1,887 | 2,014 | 2,140 | 2,287 | 11.8 | 11.9 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 5,950 | 6,597 | 6,794 | 7,526 | 12.4 | 12.3 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 43,161 | 51,040 | 51,130 | 60,581 | 15.6 | 15.7 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 26,012 | 30,391 | 30,743 | 35,892 | 15.4 | 15.3 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 2,968 | 3,308 | 3,452 | 3,844 | 14.0 | 13.9 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவி | 16,003 | 19,195 | 18,548 | 22,331 | 13.7 | 14.0 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 3,711 | 4,107 | 4,202 | 4,663 | 11.7 | 11.9 |
| மொத்தம் | 218,909 | 250,038 | 256,172 | 293,263 | 14.5 | 14.7 |

(அ) 515 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது
(இ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 2.9**

**முதலீட்டுச் சபையல்லா தனியார்துறைக் கைத்தொழில்களின் உள்நாட்டுச் செலவு அமைப்பு (அ) (மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக)**

| வகை | வலுவும் எரிபொருளும் | | கூலி | | மூலப்பொருட்கள் | | வட்டி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2006 | 2007 | 2006 | 2007 | 2006 | 2007 | 2006 | 2007 |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 3.4 | 3.7 | 10.1 | 10.3 | 39.7 | 39.8 | 1.3 | 1.5 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 4.5 | 4.9 | 15.2 | 15.3 | 13.1 | 13.2 | 2.3 | 2.6 |
| 3. மரம், மர உற்பத்திகள் | 9.1 | 9.5 | 16.1 | 16.2 | 33.2 | 33.0 | 4.1 | 4.4 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 4.1 | 4.4 | 13.2 | 13.1 | 19.5 | 19.6 | 3.4 | 3.6 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 6.4 | 6.9 | 13.3 | 13.5 | 30.4 | 30.7 | 3.5 | 3.8 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 19.9 | 20.7 | 14.9 | 15.0 | 29.2 | 29.4 | 3.2 | 3.6 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 9.9 | 10.2 | 11.3 | 11.2 | 35.9 | 36.0 | 2.5 | 2.6 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவி | 5.0 | 5.4 | 12.2 | 12.4 | 26.9 | 27.0 | 4.0 | 4.3 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 5.2 | 5.5 | 12.0 | 12.1 | 34.6 | 34.5 | 1.4 | 1.6 |
| மொத்தம் | 6.3 | 6.7 | 12.3 | 12.5 | 32.1 | 32.8 | 2.3 | 2.6 |

(அ) 515 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

தயாரிப்பாளர்கள் நன்மையடைந்தனர். பிளாத்திக்கு மற்றும் பிவிசி கைத்தொழிலும் அதிகரித்த உள்நாட்டுக் கேள்வி மற்றும் விரிவடைந்த பன்னாட்டுச் சந்தையின் விளைவால் சிறப்பான செயலாற்றத்தைப் பதிவு செய்தன.

**தனியார்துறையில் அதிகரித்த கட்டடவாக்கச் செயற்பாடுகள் மற்றும் அரசால் மேற்கொள்ளப்பட்ட பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களின் அமுலாக்கம் என்பவற்றின் முக்கிய காரணமாக உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் வகையின் வெளியீடு 2007இல் 5.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன.** பாரிய சீமெந்து உற்பத்தியாளர்கள் வெவ்வேறான பாவனைக்கு பல வீச்சிலுள்ள உற்பத்திகளை அறிமுகப்படுத்தியதுடன், அதிகரித்துச் செல்லும் கேள்வியுடன் இணைந்து செல்லும் வகையில் புதிய பொறிகளை நிறுவுவதன் மூலம் உற்பத்தி இயலளவையும் அதிகரித்தது. எனினும், குறிப்பாக இந்தியா மற்றும் சீனாவிலிருந்து ஏற்பட்ட அதிகரித்த உலகக் கேள்வியால் ஏற்பட்ட மூலப்பொருட்களின் பற்றாக்குறை காரணமாக

**அட்டவணை 2.10**

**முதலீட்டுச் சபையல்லா தனியார் துறையில் தொழிலாளர் உற்பத்தித்திறன் சுட்டெண் (அ)**

1995 =100

| வகை | 2006 | 2007 | மாற்றம் (%) |
|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 135.8 | 139.2 | 2.5 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 117.3 | 121.9 | 3.9 |
| 3. மரம், மர உற்பத்திகள் | 105.5 | 108.3 | 2.7 |
| 4. தாளும் தாள் உற்பத்தி | 106.3 | 108.9 | 2.4 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 144.8 | 150.2 | 3.7 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 117.4 | 120.2 | 2.4 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 105.3 | 107.5 | 2.1 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவி | 127.5 | 131.7 | 3.3 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 113.7 | 117.0 | 2.9 |
| மொத்தம் | 123.5 | 127.9 | 3.6 |

(அ) 515 முதலீட்டுச்சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் உள்நாட்டுச் சீமெந்து உற்பத்தியாளர்கள் கேள்விக்கு போதியளவில் வழங்க முடியவில்லை. வெளிநாட்டுச் சந்தைகளை இலக்குகளாகக் கொண்டுள்ள வைரம் பட்டை தேய்த்தல், கைத்தொழில் பெறுமதிசேர் குறைப்பு வடிவில் அரசின் தொடர்ச்சியான உதவி மற்றும் உரிய நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட தொடர்ச்சியான ஊக்குவிப்புப் பிரசாரத்தாலும் வலுவூட்டப்பட்டது. மட்பாண்டம் மற்றும் மேசைப் பொருட்கள் கைத்தொழில், ஆடம்பர ஆர்வமுள்ள வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்காக புதிய பொருட்களையும், வடிவமைப்புகளையும் புதிதாகத் தொடங்கியது. அதேவேளை சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் போன்ற வியாபாரத்துக்கு - வியாபார சந்தைக்கு விசேட வர்த்தக அடையாளங்கள் மற்றும் வடிவமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதேவேளை, வலு மற்றும் எரிபொருளின் அதிகரித்துச் செல்லும் செலவு சீமெந்து, கண்ணாடி மற்றும் மட்பாண்டக் கைத்தொழில்கள் போன்ற உயர் வலுவை நுகரும் கைத்தொழில்கள் மீது தொடர்ந்து பாரிய சுமையாக விளங்குகிறது.

**உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறி மற்றும் போக்குவரத்து கருவிகள் 2006இன் 4.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2007இல் மேலும் 5.4 சதவீதத்தால் விரிவடைந்து ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தைகள் இரண்டிலும் முன்னேற்றகரமான செயலாற்றத்தைப் பிரதிபலித்தது.** இத்துறை, கப்பல் கட்டல் மற்றும் பழுது பார்த்தல் கைத்தொழில், உந்து ஈருருளிகள் மற்றும் முச்சக்கரவண்டிகளின் பாகங்களை ஒன்று கூட்டி அமைத்தல், நீர்ப்பம்பிகள் உட்பட்ட வேளாண்மைப் பொறியின் உயர் உற்பத்தி மின்சாதனக் கருவிகள், சமையலறைச் சாதனங்கள் மற்றும் உருக்குத் தளபாடம் என்பவற்றின் விரிவாக்கத்தால் உதவப்பட்டது. கம்பிச் சுருள், கம்பி வடங்கள், அலுமினிய உற்பத்திகள், மின் விளக்குப் பொருத்திகள் மற்றும் மின்குமிழ் கைத்தொழில்களின் வளர்ச்சி கட்டடவாக்கத் துறையின் வளர்ச்சி மற்றும் வெளிநாட்டுக் கேள்வியால் வழிநடத்தப்பட்டது. கப்பல் கட்டல் மற்றும் பழுதுபார்த்தல் கைத்தொழிலின் முக்கிய தயாரிப்பாளர்கள், முதலீட்டை அதிகரித்துக் கொண்டு தரமான பணிகள் மற்றும்

உயர்தொழில்நுட்பமுள்ள கலங்களை வழங்குவதன் மூலம் பிராந்திய மற்றும் பன்னாட்டுச் சந்தைகளில் நுழைந்தன.

**2007இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்ட சுத்திகரிப்பிலான குறைவான செயலாற்றத்தின் முக்கிய காரணத்தால் அரசதுறைக் கைத்தொழில்களின் வெளியீடு 14.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** அரசதுறை வெளியீட்டில் 90 சதவீதத்திற்கும் கூடுதலானதற்கு வகைகூறிய இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு, மசகெண்ணெய் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக 2007இல் 14.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

**அதிகரித்துச் செல்லும் மூலப்பொருட்களின் செலவு, உயர் எண்ணெய் விலை மற்றும் அதிகரித்துச் செல்லும் கூலிச் செலவால் ஏற்பட்ட உற்பத்திச் செலவின் அதிகரித்துச் செல்லும் போக்கு தொழிற்சாலை கைத்தொழிலின் இலாப விகிதம் மீது எதிர்க்கணிய விளைவை ஏற்படுத்தியது.** இலங்கை மத்திய வங்கியால் 2007இல் அளவீடு செய்யப்பட்ட 515 முதலீட்டுச் சபையல்லா நிறுவனங்களின் மொத்த உற்பத்திச் செலவுக்கு, உற்பத்தியிலிருந்து சந்தைக்கு செல்வதற்க முந்திய விகிதமாக மதிப்பிடப்பட்டுள்ள கைத்தொழில் துறையிலான இலாப விகிதம் 2006இல் பதிவு செய்யப்பட்ட 2.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1.4 சதவீதத்தால் அதிகரித்தது. 2007இல் தொழிற்சாலைக் கைத்தொழிலின் இலாபகரத் தன்மை பெரும்பாலும் விரிவடைந்த விற்பனைகள் மற்றும் பயனுள்ள விலையிடல் கொள்கையால் ஏற்பட்டது. தொழிலாளர் உற்பத்தித்திறனிலான மேம்பாடுகள், புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றியமை மற்றும் சிறந்த முகாமைத்துவ நடைமுறைகள், வினைத்திறன்மிக்க வலு மற்றும் கழிவு முகாமைத்துவப் பொறிமுறைகளை அறிமுகப்படுத்தியமை, இலாபகரமாற்ற பிரிவுகளை மூடுதல் மற்றும் உற்பத்திகளை வேறுபடுத்தல் என்பன உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காக தயாரிப்பாளர்களால் எடுக்கப்பட்ட வழிமுறைகளை உள்ளடக்கியிருந்தன.

**மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக தொழிற்சாலைக் கைத்தொழிலின் கூலி 2006இன் 2.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2007இல் 1.6 சதவீதத்தால் அதிகரித்தது.** உற்பத்திச் செலவில் கூலிச் செலவின் பங்கு மூலப்பொருட்கள், எரிபொருள் மற்றும் வட்டியின் அதிகரித்த செலவு காரணமாக வீழ்ச்சியடைந்தது. எனினும், உயர் எண்ணெய் விலைகளுடன் இணங்கிச் செல்லும் வகையில் எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் படிகள் 2007இல் அதிகரிக்கப்பட்டன. தொழிலாளர் உற்பத்தித்திறனை அதிகரித்தல், புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தல், சாத்தியமான துணைப் பணிகளை வெளிமூலங்களிலிருந்து பெற்றுக் கொள்ளல், நிலையான கொடுப்பனவு முறைமையுடன் ஒப்பந்தம் மற்றும் நாட்சம்பள அடிப்படையிலான ஆட்சேர்ப்பை ஊக்குவித்தல், செயலாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு முறைமைகளைப் பேணுதல் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகளைக் கட்டுப்படுத்தல் என்பன மூலம் கூலிச் செலவைக் குறைப்பதற்கான பல வழிமுறைகள் நிறுவனங்களால் எடுக்கப்பட்டன. மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக, மின்வலு மற்றும் எரிபொருள், மூலப் பொருட்கள் மற்றும் வட்டிச் செலவின் பங்கு முறையே 6.3 சதவீதம், 2.2 சதவீதம் மற்றும் 13.0 சதவீதத்தால் அதிகரித்தன.

**கைத்தொழிற்துறை வெளியீட்டையும் அதேபோல் பிரதேச கைத்தொழில்மயமாக்கத்தை அதிகரிப்பதற்கு அரசால் பல ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன.** கிழக்கு மாகாணத்தில் முதலீட்டை ஊக்குவிப்பதற்கு "நகெனகிற உதானய" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தகைமை பெற்ற தொழில் முயற்சியாளர்களால் மேற்கொள்ளப்படும் பொறி மற்றும் கருவியின் இறக்குமதிக்கு பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. அரசால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பாரிய பிராந்திய கைத்தொழில்மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டமான "நிபயும் சிறிலங்கா" கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களுக்கு வெளியே கைத்தொழில்களை நிறுவுவதற்கு அல்லது மீள அமைப்பதற்கு வரி விடுமுறைகள், தீர்வைகள் மற்றும் பெறுமதிசேர் வரியிலிருந்தான விலக்களிப்புக்கள் மற்றும் ஏனைய நன்மைகளை தொடர்ந்து வழங்கியது. கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களுக்கு வெளியே முதலீட்டை மீள அமைப்பதற்கோ அல்லது ஆரம்பிப்பதற்கோ சலுகைகளை வழங்குவதற்கான காலப்பகுதி 2009 மார்சு வரை மேலும் நீடிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 41 புதிய கைத்தொழில்கள் நிறுவப்பட்டும், 14 நலிவடைந்த கைத்தொழில்கள் புத்துயிரளிக்கப்பட்டும் மற்றும் 4 கைத்தொழில்கள் விரிவாக்கம் செய்யப்பட்ட வேளையில் 3 கைத்தொழில்கள் 2007இல் கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களுக்கு வெளியே மீள அமைப்பதற்கு ஒப்புதலளிக்கப்பட்டது.

**வரவு செலவுத்திட்டம் 2008, தைத்த ஆடைகள், புடவை, கட்டடப் பொருட்கள், மட்பாண்டம், இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் போது ஒருங்கிணைந்த மற்றும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய முயற்சிகளுக்கான தேவையை விதந்துரைத்தது.** கொழும்பு மாவட்டத்துக்கு வெளியே அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலைகளுக்கு நவீனமயமாக்கத்தை இயலச் செய்வதற்கு 10 சதவீத வட்டியில் உச்சளவு ரூ.15 மில்லியனுக்கு உட்பட்டு சலுகைக் கடன்கள் வழங்கப்பட்டன. உள்நாட்டு ஆடைக் கைத்தொழிலை ஊக்கப்படுத்தும் ஒரு நடவடிக்கையாகவும், உயர்தரமுள்ள சீத்தைகளின் உற்பத்திக்காகவும் உள்நாட்டு நுகர்வுக்கான புடவை இறக்குமதிகள் மீது கிலோ. கிறாமொன்றிற்கு ரூ.50 செஸ் வரி விதிக்கப்பட்டிருக்கையில் நூலின் இறக்குமதிக்கு பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலை விரிவாக்குவதற்கு, வரவு செவுத்திட்டம், இலாபங்கள் மற்றும் இரத்தினக்கற்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய் மீது வரி விலக்களிப்பை முன்மொழிந்தது. இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களை ஏற்றுமதி செய்வோர் ஏற்றுமதி வருவாய்களின் 50 சதவீதத்தை மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கையில் இரத்தினக் கற்கள் மற்றும் ஆபரணங்களை பொதியிடும் பொருட்களும் சுங்கத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டன. மட்பாண்டக் கைத்தொழிலின் அபிவிருத்திக்கு உதவுவதற்காக மட்பாண்ட

உற்பத்தியில் பயன்படுத்தப்படும் சிலவகை இரசாயனங்களுக்கான இறக்குமதி தீர்வை குறைக்கப்பட்டது.

**கைத்தொழில்துறைக்கான கொள்கை வகுப்புக்கு உரித்தான கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு கைத்தொழில்துறை செயலாற்றத்தை அதிகரிப்பதற்கான பல முன்னெடுப்புக்களை எடுத்துள்ளது.** இவ் அமைச்சின் வழிநடத்தலின் கீழும் தேசிய விஞ்ஞான கழகத்தின் உதவியுடனும், பன்னாட்டுச் சந்தைக்குப் பொருந்தக்கூடிய வெவ்வேறான வடிவமைப்புகளுடன் புதிய உற்பத்திகளை வழங்குவதற்கு மின்னியல் மற்றும் இலத்திரனியல், வாகனங்கள், இறப்பர் மற்றும் ஆபரணக் கைத்தொழில்களை வசதிப்படுத்துவதற்கு மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் விரைந்த பிரதியிடல் பொறி மற்றும் பல் அடுக்கு அச்சிடப்பட்ட சுற்றோட்டத்தட்டு செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அமைச்சு 300 தொழிற்சாலைக் கைத்தொழில்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் "கமற்ற கர்மாந்த" செயற்றிட்டங்களுக்கு தொடர்ந்து உதவியது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்திலுள்ள முதலீடுகளுக்கு சலுகைகளை வழங்கும் போது, முதலீட்டின் அளவு மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை போன்ற ஆகக் குறைந்த தேவைப்பாடுகள் தளர்த்தப்படும். தேசிய தூய்மையான உற்பத்தி நிலையம் நிறுவப்பட்டமை மற்றும் இவ்வமைச்சின் கீழ் உற்பத்தித்திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்படுத்தியமை, கைத்தொழில்களின் வெளியீட்டையும், போட்டித்தன்மையையும் அதிகரித்தன. மேலும், அரச தனியார் பங்குடைமைச் செயற்றிட்டமாக ஹிங்குரான சீனித் தொழிற்சாலையை மீளத் திறத்தல், கந்தளாய் சீனித் தொழிற்சாலையில் உற்பத்தியை மீள ஆரம்பித்தல் மற்றும் 2015 அளவில் உள்நாட்டுச் சீனித் தேவையின் 50 சதவீதத்தை உற்பத்தி செய்யும் நோக்குடன் பிபிலையிலும், மொனறாகலையிலும் புதிய சீனித் தொழிற்சாலைகளை நிறுவுதல் போன்ற பல முன்னெடுப்புக்கள் உள்நாட்டுச் சீனி உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசால் மேற்கொள்ளப்பட்டன.

**நாட்டின் விரைந்த கைத்தொழில் மயமாக்கத்தைப் பலப்படுத்துவதற்கு ஏனைய பல உரிய அதிகாரசபைகள் மற்றும் நிறுவனங்களும் அவற்றின் உதவியை வழங்கின.** தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முதலீட்டு அபிவிருத்தி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் கீழ் நாட்டில் முதலீட்டாளர்களுக்கான மத்திய வசதிப்படுத்தல் மையமாக விளங்கும் முதலீட்டுச்சபை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இருபாலரையும் ஊக்குவிக்கும் ஒரு நாள் பணியூடான ஒப்புதலளித்தல் செயல்முறையை விரைவுபடுத்தியதுடன், ஏற்றுமதி நடைமுறையை குறைப்பதற்காக இலத்திரனியல் தரவு பரிமாற்றல் பொறிமுறையைத் தொடங்கியது. இருவழி முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு முதலீட்டுச் சபை பாகித்தான் முதலீட்டுச் சபையுடனும், சீன முதலீடு ஊக்குவிப்பு முகவருடனும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. கிழக்கு மாகாணத்தில் முதலீட்டு ஊக்குவிப்பை மையமாகக் கொண்டு முதலீட்டு சபையால் உருவாக்கப்பட்ட புதிய ஊக்குவிப்புப் பொதி, "நகெனகிற நவோதய" அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமாக விளங்கியது. அரச தனியார் பங்குடமைச் செயற்றிட்டங்களாக புடவை தயாரிப்பு கைத்தொழிலுக்காக ஒப்படைக்கப்பட்ட விசேட பொருளாதார வலயங்களை நிறுவுவதற்கும், முதலீட்டாளர்களுக்கு கிடைக்க வேண்டிய பணிகளின் வழங்கலை இயலச் செய்யும் முகமாக ஏற்கனவே இருக்கும் வலயங்களில் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் முன்னெடுப்புக்கள் எடுக்கப்பட்டன. இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உதவியுடன், ஏற்றுமதிச் சந்தைகளுக்காக கூடிய தரம் வாய்ந்த இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கு சிறிய அளவிலான இறப்பர் தயாரிப்பாளர்களுக்கான நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்தியது. ஆடைக் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பாக 2007இல் இணைந்த ஆடைத்தொழில் அமைப்புக்களின் ஒன்றியத்தால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய முன்னெடுப்புக்களாக உற்பத்தித்திறன் முன்னேற்றம் மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி, உள்நாட்டு மற்றும் பன்னாட்டு மதிப்பைக் கட்டியெழுப்பல், உற்பத்தி மற்றும் சந்தை அபிவிருத்தி, பின்னோக்கிய ஒருங்கிணைப்பில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அபிவிருத்தி என்பன விளங்கின.

**பிராந்திய பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில்நிலை உருவாக்கத்திற்கான சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை இனங்கண்டு அரசு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறையின் பொதுவான செயற்பாடுகளை அதிகரிப்பதற்கு பல ஊக்குவிப்புக்களை வழங்கியது.** சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு உதவியை வழங்குவதன் முக்கிய குறிக்கோளாக பிராந்திய மட்டத்தில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் அதேவேளை உற்பத்தி மற்றும் வியாபார செயற்பாடுகளை அதிகரிப்பதாக விளங்கியது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை மாகாணங்களில் ஏற்றுமதி சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கு சந்தை அபிவிருத்தி, தேர்ச்சி அபிவிருத்தி, விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற பல எண்ணிக்கையான நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது தொடர்பான அமைச்சுக்கள், லங்கா புத்திர அபிவிருத்தி வங்கி மற்றும் வர்த்தக சம்மேளனம் போன்ற ஏனைய தொடர்பான நிறுவனங்களும் 2007இல் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் அபிவிருத்தி மீதான அரசின் கொள்கை முன்னெடுப்புக்களுடன் இணைந்து பணியாற்றின. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு உதவுவதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் பிராந்திய கைத்தொழில் பேட்டைகளை நிறுவுவதற்கு ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டது.

**கைத்தொழில்துறையின் வளர்ச்சி உத்வேகம், அதிகரித்துச் செல்லும் எண்ணெய் மற்றும் உணவு விலைகள், போன்ற வெளிக்காரணங்களாலும் அது போன்று 2007இல் அதிகரித்துச் செல்லும் முரண்பாடுகள் போன்ற நாட்டின் விசேட அதிர்ச்சிகளாலும் பகுதியளவில் பாதிப்புக்குள்ளானது.** நாட்டில் எரிபொருள் விலைகள், பன்னாட்டு எரிபொருள் விலைகளுடன் இணங்கிச் செல்லும் வகையில் அதிகரிக்கப்பட்டன. எரிபொருள் கைத்தொழில் துறையின் செலவு அமைப்பில் முக்கிய கூறாக

விளங்குவதால், உயர் விலை கைத்தொழில்களின் இலாப அளவுகளையும், முதலீட்டு இயலளவுகளையும் பாதித்தன. இலங்கையின் ஆடைத்துறை குறிப்பாக ஐக்கிய அமெரிக்க சந்தை உட்பட பன்னாட்டுச் சந்தையில் கடும் போட்டியை எதிர்கொண்டது. சீனா மற்றும் வியட்னாமிலிருந்து தோற்றம் பெறும் சவால்களைத் தீர்ப்பதற்கு இலங்கை செலவைக் குறைக்கும் உத்திகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் போட்டித்தன்மையை மேம்படுத்த வேண்டியிருப்பதுடன், தகவல், பொதியிடல், சந்தைப்படுத்தல், போக்குவரத்து, ஏற்பாட்டு பணிகளை வழங்குதல் மற்றும் நிதியியல் பணிகள் போன்ற வர்த்தக வசதிப்படுத்தல் பணிகளின் வினைத்திறனை அதிகரிக்க வேண்டும். முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டத்தின் கீழ் தொடர்ச்சியான சந்தை நுழைவை வைத்திருப்பதற்கு, மனித மற்றும் தொழிலாளர் உரிமைகள், மற்றும் சுற்றாடல் நியமங்கள் போன்ற குறிப்பிட்ட துறைகள் மேலும் மேம்படுத்தப்பட வேண்டும். உள்நாட்டுச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில்கள், இறக்குமதி செய்யப்பட்ட மலிவான விலையுள்ள பொருட்கள், மற்றும் முரண்பாடுகள் அதிகரித்துச் செய்வதன் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொருத்தமான வழங்கல் தொடர் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளைப் பேணுவதில் அதிகரித்த இடர்பாடுகள் காரணமாக கடுமையான போட்டியை எதிர்கொண்டது. தேர்ச்சி பெற்ற தொழிலாளர் பற்றாக்குறை, குறைந்த உற்பத்தித்திறன் மற்றும் குறைவான போட்டித்தன்மை, உரிமங்களைப் பரிமாறும் போதும் கொடுகடன் வசதிகளைப் பெறும்போதும் ஏற்படும் பல எண்ணிக்கையான நடைமுறைகள், பொருத்தமான உயர் வியாபாரக் கொடுக்கல் வாங்கற் செலவுகள் உயர் வட்டி வீதங்கள் மற்றும் சிக்கலான வரி முறைமை என்பன கைத்தொழிற்துறையால் எதிர்கொள்ளப்பட்ட பாரிய தடைகளாகும்.

**2007ஆம் ஆண்டில் பதனிடல் (பெருந்தோட்டப் பயிர்களின்) துணைத்துறை முன்னைய ஆண்டின் 0.8** சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் முக்கியமாக இறப்பர் மற்றும் தெங்கின் அதிகரித்த உற்பத்தி காரணமாக 2.4 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.

**குடிசைக் கைத்தொழில் துணைத்துறை 2006இன் 5.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.6 சதவீதத்தால் விரிவடைந்தது.** இத்துறையிலான வளர்ச்சி, கட்டடவாக்கத்துறையில் ஏற்பட்ட அதிகரித்த கேள்வியுடன் மரம் அரிதல், கற்பாறைப் பொருட்கள் மற்றும் சிறிய அளவான கட்டடப் பொருட்கள் உற்பத்திச் செயற்பாடுகளில் ஏற்பட்ட விரிவாக்கத்தில் உதவப்பட்டது. புடவை உற்பத்தி மற்றும் உணவுப் பொருட்களின் சிறிய அளவிலான உற்பத்தியும் இவ்வாண்டு வெளியீட்டில் அதிகரிப்பை எடுத்துக் காட்டின. எனினும், குடிசைக் கைத்தொழில்துறையின் பொதுவான வளர்ச்சி 2007இல் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் நெல் குற்றல் செயற்பாடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் ஓரளவு காரணத்தால் தடைப்பட்டது.

**மின்வலு, வாயு மற்றும் நீர்த்துறை 2006இல் சார்பு ரீதியான 14.8 சதவீத உயர் வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 4.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** மின்வலுத் துணைத் துறையிலான பெறுமதிகூட்டல் முன்னைய ஆண்டின் சார்பு ரீதியிலான 16.2 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2007இல் 4.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. குறைந்த செலவைக் கொண்ட நீர் மின்வலு உருவாக்கத்தில் ஏற்பட்ட 15.0 சதவீத வீழ்ச்சி மின்வலு துணைத்துறையின் மெதுவடைவுக்கு பங்களிப்புச் செய்தது. உருவாக்கப்பட்ட மொத்த மின்வலுவில் நீர்வலு உருவாக்கத்தின் பங்கு, நீர் பிரதேசங்களில் சாதகமற்ற காலநிலை நிலைமைகள் காரணமாக முன்னைய ஆண்டின் 49.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 40.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாக, வலுவின் மொத்தக் கேள்வியை எதிர்கொள்வதற்கு வெப்ப மின்வலுவின் பங்கு 59.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. மின்வலுவுக்கான அதிகரித்த கேள்வி அநேகமாக வீட்டுப்பாவனை, வர்த்தகம் மற்றும் கைத்தொழில்துறைகள் உள்ளிட்ட சகல நுகர்வோர் தொகுதிகளிலிருந்தும் வந்தது. இவ்வாண்டில், வாயுத் துணைத் துறையில் பெறுமதி கூட்டல் 2.9 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் 2007இல் குழாய் நீரை வழங்குவதற்காக புதிதாக ஏற்படுத்தப்பட்ட நீர் வழங்கல் செயற்றிட்டங்களுடன் நீர்த் துணைத்துறை 7.1 சதவீதத்தால் அதிகரித்தது.

**2006இல் சார்பு ரீதியில் 24.2 சதவீத உயர் வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்த சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்துறை இவ்வாண்டில் மேலும் 19.2 சதவீத வீதத்தில் விரிவடைந்தது.** இரத்தினக்கற்கள் துணைத் துறையிலான பெறுமதிகூட்டல், 5.3 சதவீதத்தால் அதிகரித்த இரத்தினக்கற்கள் ஏற்றுமதிகளின் அளவுடன் 13.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. ஏனைய சுரங்கமகழ்தல் செயற்பாடுகளும் முன்னைய ஆண்டின் 30.6 சதவீத உயர் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் காரீயம், இல்மனைற்று மற்றும் ஏனைய சுரங்கமகழ்தல் உற்பத்திகளின் அதிகரித்த ஏற்றுமதிகளால் பிரதிபலிக்கப்பட்டவாறு 21.9 சதவீதம் கொண்ட வீதத்தில் தொடர்ந்து வளர்ச்சியடைந்தது. கட்டடவாக்கத் துறையிலிருந்து உருவாக்கப்பட்ட அதிகரித்த கேள்வி கல்லுடைத்தல் துறையின் வளர்ச்சி மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

**கட்டடவாக்கத்துறை முன்னைய ஆண்டின் 9.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2007இல் அரசதுறை மற்றும் தனியார்துறை இரண்டிலுமிருந்தான சாதகமான பங்களிப்புடன் சார்பு ரீதியில் 9.0 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் தொடர்ந்து விரிவடைந்தது.** அரசதுறையின் கட்டடவாக்கச் செயற்பாடுகள் குறிப்பாக தெற்கு அதி விரைவுப்பாதை மற்றும் கொழும்பின் சுற்றுப்புற நெடுஞ்சாலை போன்ற வீதி வலையமைப்பு விரிவாக்கச் செயற்றிட்டங்களில் ஏற்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களில் பெருமளவு செறிந்து காணப்பட்டது. வலு உருவாக்கத்தின் இயலளவு விரிவாக்கச் செயற்றிட்டங்களிலான அபிவிருத்திகள் 2007இலும் அவதானிக்கப்பட்டது. குறிப்பாக, கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மீள்நிர்மாணச் செயற்பாடுகளும் கட்டடவாக்கத் துறையிலான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன. தனியார்துறையின் பங்களிப்பு வங்கித்துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்களால் பிரதிபலிக்கப்பட்டவாறு தொடர்மாடி மற்றும் வீடமைப்பு செயற்றிட்டங்கள், மற்றும் ஏனைய வர்த்தக மற்றும் வதிவிட வீடமைப்புச் செயற்பாடுகளின் தொடர்ச்சியான விரிவாக்கத்தில் புலப்படுகிறது. இத்துறையிலான வளர்ச்சி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும்

இறக்குமதி செய்யப்பட்ட கட்டடப்பொருட்களின் பயன்பாட்டால் மேலும் பிரதிபலிக்கப்பட்டது. இவ்வாண்டின் பின்னரைப்பகுதியில் குறுகிய காலப்பகுதிக்கு சீமெந்து வழங்கலுக்குத் தட்டுப்பாடு இருந்த போதிலும் வருடாந்த சீமெந்து நுகர்வு 2006 உடன் ஒப்பிடுகையில் 10.7 சதவீதத்தால் அதிகரித்தது. 2007இல் விலை மட்டங்களில் ஏற்பட்ட பொதுவான அதிகரிப்புடன், கட்டடவாக்கம், பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தால் பிரசுரிக்கப்பட்ட சுட்டெண்ணின்படி கட்டடப்பொருட்களின் பொதுவிலை மட்டமும் 11.4 சதவீதத்தால் அதிகரித்தன.

### பணிகள்

**இவ்வாண்டில் பணிகள்துறை பொருளாதார விரிவாக்கத்தின் முக்கிய துறையாக தொடர்ந்து விளங்கி, மொ.உ.உ. இன் மொத்தப் பங்கில் 2006இல் அதேமட்டத்திலிருந்ததுடன் மொத்த பொருளாதார வளர்ச்சிக்கு 62 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்தது.** எனினும், இத்துறையின் வளர்ச்சி உத்வேகம் 2006இன் 7.7 சதவீதத்திலிருந்து 2007இல் 7.1 சதவீதத்துக்கு மெதுவடைந்தது. இம்மெதுவடைவு, சாதகமற்ற பாதுகாப்பு நிலைமையுடன் 2007இல் பின்னடைவுக்குள்ளான சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துணைத்துறையில் ஏற்பட்ட சுருக்கத்தாலும் இறக்குமதி வர்த்தகம் மற்றும் உள்நாட்டு வர்த்தகச் செயற்பாடுகளிலான மெதுவடைவாலும் ஏற்பட்டது.

**இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகளை உள்ளடக்கும் மொத்த மற்றும் சில்லறை வர்த்தகத்துறை இவ்வாண்டில் 6.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இறக்குமதி வர்த்தகத் துணைத்துறையின் பெறுமதி கூட்டல் பங்களிப்பு முன்னைய ஆண்டின் 6.8 சதவீத வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 2007இல் 3.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இத்துணைத் துறையின் முக்கிய வளர்ச்சி உந்துவிசை, அளவு நியதிகளில் 16.7 சதவீதத்தால் அதிகரித்த முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பிரதிபலித்த முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளிலிருந்து வந்தது. மேலும், முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளிலான உயர் வளர்ச்சி, குறிப்பாக கட்டடவாக்கப் பொருட்கள் மற்றும், பொறி மற்றும் கருவி இறக்குமதிகளிலான உயர் அளவு வளர்ச்சியுடன் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்களுக்கான சாதகமான பாதையை எடுத்துக் காட்டுகிறது. இவ்வாண்டில் மசகெண்ணெய் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இடைநிலைப் பொருள்களின் இறக்குமதிகள் 0.8 சதவீதம் கொண்ட சிறியளவான வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதேவேளை 4.9 சதவீதத்தால் சுருக்கமடைந்த நுகர்வுப் பொருட்கள் இறக்குமதி வர்த்தகச் செயற்பாடுகளில் எதிர்க்கணியத் தாக்கத்தைக் கொண்டிருந்தது. இதேவேளை, நெல் உற்பத்தியிலான பற்றாக்குறையுடன் உள்நாட்டுச் சந்தையில் விலை அதிகரித்துச் செல்வதைக் குறைக்கும் முயற்சியாக அரிசி இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்த போதிலும் கோதுமை மா மற்றும் சீனி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் இறக்குமதிகள் பெறுமதி நியதிகளில் 26 சதவீதத்திற்கும் கூடுதலாக வீழ்ச்சியடைந்தன. முழுமையாக நோக்கின், நீண்டகால நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் பெறுமதி நியதிகளில் வீழ்ச்சியடைந்து, இறுக்கமான நாணயக் கொள்கையின் தாக்கத்தைப் பிரதிபலிக்கிறது.

**அநேகமான துணைத் துறைகளிலிருந்து வரும் உந்து விசையுடன், ஏற்றுமதி வர்த்தகத் துணைத்துறை 2007இல் 8.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** அளவு நியதிகளில் 8.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த மிகப் பெரிய துறையாக விளங்கும் கைத்தொழில் ஏற்றுமதிகள் ஐரோப்பிய ஒன்றியப் பிராந்தியத்தில் சாதகமான தீர்வை வீதங்களிலிருந்து தொடர்ந்து நன்மையடைந்த புடவை மற்றும் ஆடைகளின் அளவில் ஏற்பட்ட 6.8 சதவீத வளர்ச்சியால் உதவப்பட்டது. உணவு, பானங்கள் மற்றும் புகையிலை மற்றும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான உயர் பங்களிப்புக்களுடன் ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகளும் அளவு நியதிகளில் 11.8 சதவீதத்தால் விரிவடைந்தன. உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வளர்ச்சியைத் தொடர்ந்து இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய வேளாண்மை உற்பத்திகளின் அதிகரித்த ஏற்றுமதிகளுடன் வேளாண்மை ஏற்றுமதிகள் 2.9 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தன. எனினும், தேயிலையின் உயர் பன்னாட்டு விலைகள் காரணமாக வெளிநாட்டு வருவாய்கள் அதிகரித்த போதிலும் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக தேயிலை ஏற்றுமதிகள் அளவு நியதிகளில் வீழ்ச்சியடைந்தன.

**இவ்வாண்டில் அதிகரித்த வேளாண்மை மற்றும் கைத்தொழில் வெளியீடு காரணமாக உள்நாட்டு வர்த்தக துணைத்துறை 2006இன் 8.9 சதவீதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** நெல் உற்பத்தியிலான வீழ்ச்சி துணைத்துறையின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்திய போதிலும் தெங்கு, மீன்பிடி மற்றும் மரக்கறிகள் மற்றும் துணை உணவுப் பயிர்கள் உற்பத்தி பெறுமதி கூட்டலில் சாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தது. அதிகரித்த உள்நாட்டுக் கேள்வியுடன் உணவு, பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்திகள் மற்றும் சீமெந்து மற்றும் ஏனைய கட்டடவாக்கப் பொருட்கள் போன்ற உள்நாட்டுச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில் பொருட்களின் வர்த்தகப்படுத்தலும் வளர்ச்சி மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

**பெறுமதி கூட்டப்பட்ட நியதிகளில் 2.3 சதவீதத்தால் சுருக்கமடைந்த சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துறைக்கு 2007ஆம் ஆண்டு சாதகமாக விளங்கவில்லை.** சுற்றுலாக் கைத்தொழில் மீது தீங்கு விளைவிக்கத்தக்க தாக்கத்தைக் கொண்டிருந்த சாதகமற்ற பாதுகாப்பு நிலைமைக்கு மத்தியிலும் சுற்றுலாத்துறை வருகைகளில் ஏற்பட்ட 11.7 சதவீத வீழ்ச்சியுடன் இவ்வாண்டு சவால்மிக்கதாக விளங்கிய வேளையில் கைத்தொழில்துறை மீட்சியடைய முயற்சித்துக் கொண்டிருந்தது. மேற்கு ஐரோப்பா மற்றும் ஆசியப் பிராந்தியத்திலிருந்தான சுற்றுலா வருகைகள் முறையே 14.9 சதவீதத்தாலும் 16.4 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் எதிர்க்கணியத் தாக்கத்தைக் குறைக்கும் பொருட்டு, இத்துறை விருந்தினர் இரவுகள் நியதிகளில் ஏற்பட்ட 30 சதவீதத்திற்கும் கூடுதலாக வளர்ச்சியடைந்த உள்நாட்டுச் சுற்றுலாவை ஊக்குவிப்பதற்கு இவ்வாண்டில் வலுவான பிரசாரத்தில்

ஈடுபட்டது. ஆனால், மொத்த விருந்தினர் இரவுகளில் 70 சதவீதத்திற்கும் கூடுதலாக வகைகூறிய வெளிநாட்டு விருந்தினர் இரவுகள் இவ்வாண்டில் 11.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

**போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துறையிலான பெறுமதிகூட்டல் 2006இன் 12.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2007இல் 10.5 சதவீதத்தால் அதிகரித்தது.** இத்துறை பணிகள் துறையில் ஆகக் கூடிய வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன், இது அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல்துறை, சரக்கு கையாளல், துறைமுகங்கள் மற்றும் வான் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து ஆகிய மூன்று துணைத்துறைகளிலுமான சிறப்பான செயலாற்றத்தால் உந்தப்பட்டது. பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தை உள்ளடக்கிய போக்குவரத்துத் துணைத்துறை முன்னைய ஆண்டின் 11.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 9.4 சதவீதம் கொண்ட மொத்த வளர்ச்சியைப் பதிவு செய்தது. இவ்விரிவாக்கம் கொத்தணி பேரூந்து கம்பனிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்து ஆகிய இரண்டாலும் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோ மீற்றர்களில் ஏற்பட்ட அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டது. வீதிச் சரக்குப் போக்குவரத்து மிதமான வீதத்தில் வளர்ச்சியடைந்து உள்நாட்டு உற்பத்தி மற்றும் பன்னாட்டு வர்த்தகத்திலான அதிகரிப்புடன் இணைந்த பொருட்கள் போக்குவரத்துச் செயற்பாடுகளில் ஏற்பட்ட மேம்பாடுகளைப் பிரதிபலிக்கிறது. வான் பயண துணைத் துறையில் சிறிலங்கன் எயார்லைன்சால் பறக்கப்பட்ட மொத்த பயணிகள் கிலோ மீற்றர்கள் இவ்வாண்டில் 5.2 சதவீதத்தால் அதிகரித்தன. இதேவேளை, உள்நாட்டு வான் நிறுவனங்களால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோ மீற்றர்களில் ஏற்பட்ட அதிகரிப்பு 2006இன் வீழ்ச்சியிலிருந்து ஏற்பட்ட மீட்சியைக் காட்டுகிறது.

**2003இலிருந்து பெறுமதி கூட்டல் நியதிகளில் 20 சதவீதத்திற்கும் கூடுதலான ஆண்டு வளர்ச்சி வீதங்களுடன் அண்மைக் காலத்தில் உற்சாகமான வளர்ச்சியை அனுபவித்த அஞ்சல் தொலைத்தொடர்பூட்டல்துறை 2007இல் மேலும் 21.5 சதவீதத்தால் தொடர்ந்து விரிவடைந்தது.** குறியீட்டுப் பிரிவு பல்புடை இணைப்பு இணைப்புக்கள் உள்ளடங்கலான நிலையான இணைப்புக்களைக் கொண்ட வாடிக்கையாளர் மட்டம் 45 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து, 2007இல் 2.7 மில்லியனுக்கும் கூடுதலான இணைப்புக்களை அடைந்தது. செல்லிடத் தொலைபேசி எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி கடந்த தொடர்ச்சியான மூன்று ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட 50 சதவீதத்துக்குக் கூடுதலான வளர்ச்சிக்குப் பின்பு 2007இல் 50 சதவீதத்துக்குக் குறைவான 47.5 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்ததுடன், இப்பணிகளுக்கான அடைக்கப்பட்டிருந்த கேள்வி ஓரளவுக்கு நிறைவேற்றப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டுகிறது. 2007 இறுதியளவில், செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளரின் எண்ணிக்கை 8 மில்லியனாக விளங்கியது. இணையம் மற்றும் மின்னஞ்சல் பயன்பாடு 55.7 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், செல்லிடத் தொலைபேசிப் பாவனை போன்ற ஏனைய தொலைத் தொடர்பூட்டல் பணிகளில் காணப்பட்ட உயர்பயன்பாட்டு மட்டத்தை இப்பிரிவு அடைய வேண்டும்.

**சரக்குக் கையாளல், துறைமுகங்கள் மற்றும் வான் போக்குவரத்துத் துணைத்துறை முன்னைய ஆண்டின் 20.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 8.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இம்மெதுவடைவு பெரும்பாலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கொழும்புத் துறைமுகத்தின் இயலளவுப் பற்றாக்குறையுடன் கொழும்புத் துறைமுகத்தால் கையாளப்பட்ட மாற்றிக் கப்பலேற்றல் வெளியீட்டிலான குறைவான வளர்ச்சியால் ஏற்பட்டதாகும். இவ்வாண்டில், சவுத் ஏசியா கேற்வே ரேமினல் உள்ளடங்கலாக கொழும்புத் துறைமுகம் 3.38 மில்லியன் இருபது அடிக்குச் சமனான அலகுகளை கையாண்டு 9.8 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இதுவே கொழும்புத் துறைமுகத்தால் கையாளப்பட்டு பதிவு செய்யப்பட்ட ஆகக் கூடியளவான இருபது அடிக்குச் சமமான அலககளாகும். கையாளப்பட்ட மொத்த வெளியீட்டில், மூன்றில் இரண்டு பங்கிற்கும் கூடுதலாக வகைகூறிய மாற்றிக் கப்பலேற்றல் அளவு 2006இன் 36.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 9.7 சதவீதத்தால் விரிவடைந்தது. வான் சரக்கு அளவுகள் 5.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து வான் பணிக்

**அட்டவணை 2.11**

**கூட்டுக் கேள்வி**

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைளில் (ரூ.மில்) | | | நிலையான (2002) விலைகள் (ரூ.மில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2005 | 2006 | 2007(அ) | 2005 | 2006 | 2007(அ) |
| **அ. உள்நாட்டுக் கேள்வி** | | | | | | |
| நுகர்வு | 2,013,802 | 2,439,816 | 2,949,712 | 1,592,251 | 1,704,633 | 1,787,650 |
| (% மாற்றம்) | 15.3 | 21.2 | 20.9 | 3.3 | 7.1 | 4.9 |
| மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் | 658,019 | 822,216 | 966,700 | 514,984 | 583,970 | 634,669 |
| (% மாற்றம்) | 24.6 | 25.0 | 21.2 | 9.3 | 13.4 | 8.7 |
| மொத்த உள்நாட்டுக் கேள்வி | 2,671,821 | 3,262,032 | 3,946,412 | 2,107,235 | 2,288,603 | 2,422,319 |
| (% மாற்றம்) | 17.4 | 22.1 | 21.0 | 4.7 | 8.6 | 5.8 |
| **ஆ. வெளிநாட்டுக் கேள்வி** | | | | | | |
| பொருட்களினதும், பணிகளினதும் ஏற்றுமதிகள் | 793,153 | 885,381 | 1,046,075 | 678,356 | 704,408 | 751,959 |
| (% மாற்றம்) | 7.4 | 11.6 | 18.1 | 6.6 | 3.8 | 6.8 |
| பொருட்களினதும், பணிகளினதும் இறக்குமதிகள் | 1,012,192 | 1,208,757 | 1,414,100 | 843,919 | 902,463 | 941,891 |
| (% மாற்றம்) | 9.6 | 19.4 | 17.0 | 2.7 | 6.9 | 4.4 |
| தேறிய வெளிநாட்டுக்கேள்வி | -219,039 | -323,376 | -368,026 | -165,564 | -198,055 | -189,932 |
| **இ. மொத்தக் கேள்வி** | 2,452,782 | 2,938,656 | 3,578,386 | 1,941,671 | 2,090,548 | 2,232,387 |
| (% மாற்றம்) | 17.3 | 19.8 | 21.8 | 6.2 | 7.7 | 6.8 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள் : தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 2.12** **நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு**

| விடயம் | மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு % | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 2005 | 2006 | 2007(அ) | 06/05 | 07/06 |
| 1. உணவு, குடிவகை மற்றும் புகையிலை | 37.9 | 41.2 | 39.7 | 27.5 | 16.5 |
| 2. புடவையும் காலணியும் | 8.5 | 7.6 | 7.9 | 5.4 | 25.9 |
| 3. வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் | 10.0 | 10.2 | 11.3 | 19.8 | 33.8 |
| 4. தளபாடமிடுதல், வீட்டுச் சாதனங்கள், வீட்டின் தொடர்ச்சியான பராமரிப்பு | 6.0 | 6.9 | 6.5 | 34.7 | 13.7 |
| 5. நலம் | 1.5 | 1.5 | 1.5 | 20.2 | 21.6 |
| 6. போக்குவரத்து | 21.3 | 19.7 | 20.4 | 8.6 | 25.5 |
| 7. களியாட்டமும் பொழுதுபோக்கும் | 2.6 | 3.0 | 3.5 | 39.5 | 41.3 |
| 8. கல்வி | 0.1 | 0.1 | 0.1 | 9.3 | 12.4 |
| 9. உணவகங்களும் விடுதிகளும் | 1.7 | 0.8 | 0.7 | -46.9 | 12.8 |
| 10. பல்வகைப் பொருட்களும் பணிகளும் | 4.3 | 3.8 | 3.1 | 3.1 | 0.1 |
| 11. வெளிநாட்டு வதிவுள்ளோர் செலவு | 9.9 | 9.2 | 8.9 | 9.3 | 17.2 |
| 12. வதிவற்றோர் செலவு நீங்கலாக | 3.8 | 4.0 | 3.8 | 23.2 | 14.9 |
| **மொத்தத் தனியார் நுகர்வுச் செலவு** | 100.0 | 100.0 | 100.0 | 17.5 | 20.9 |

(அ) தற்காலிகமானவை

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிவபர திணைக்களம்

கைத்தொழிலில் சார்பு ரீதியில் குறைவான விரிவாக்கத்தைப் பிரதிபலிக்கின்றது.

**வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துத் துணைத்துறை பெறுமதி கூட்டல் நியதிகளில் 8.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** உயர் மற்றும் தளம்பலுறும் வட்டி வீதங்களின் சூழலில் முற்பணங்கள் மற்றும் பிணையங்கள் மீதான ஏனைய முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானத்துடன் வங்கித்தொழில் துறையின் வருமானம் இவ்வாண்டில் அதிகரித்தது. பிணையங்கள் மற்றும் வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலிருந்து வர்த்தக வங்கிகளின் வட்டியற்ற வருமானமும் 2007இல் அதிகரித்தது. காப்புறுதிப் பணிகளிலான சிறந்த செயலாற்றமும் இத்துறையின் பெறுமதி கூட்டப்பட்ட வளர்ச்சி மீது நேர்க்கணியத் தாக்கத்தை ஏற்படுத்தியது. உண்மைச் சொத்துத்துறை இவ்வாண்டில் தொடர்ந்து விரிவடைந்த போதிலும் இத்துறையில் காணப்பட்ட ஆரம்ப உத்வேகம் ஓரளவிற்கு குறைந்து போனது.

**அரச பணிகள் துறை முன்னைய ஆண்டின் 5.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 6.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** அரச படைகள் மற்றும் அரச துறைக்கான புதிய ஊழியர்களின் ஆட்சேர்ப்பில் ஏற்பட்ட விரிவாக்கம் அரச பணிகளில் உயர் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.

**தனியார் பணிகள் துறை 2006இல் காணப்பட்ட பெறுமதி கூட்டல் நியதிகளிலான 7.8 சதவீத விரிவாக்கத்தைப் போன்றே அதன் வளர்ச்சி உத்வேகத்தை நீடித்து நிலைத்திருக்கச் செய்தது.** தனியார் நலப் பணிகள், கல்வி மற்றும் ஏனைய தனியார் பணிகளிலான உயர் செயலாற்றம் இவ்வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.

## 2.3 செலவினம்

**மொத்த உள்நாட்டுச் செலவினம் (மொ.உ.செ) உள்நாட்டு பொருளாதாரச் செயற்பாட்டால் உருவாக்கப்பட்ட மொத்தக் கேள்வியை அளவிடுகிறது.** எனவே, மொ.உ.செ, பொருளாதாரத்தின் தனியார் மற்றும் அரச துறைகள் இரண்டினதும் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினத்தினதும் கூட்டுத்தொகை என திடமாகக் கூறப்படலாம். 2007இல் மொ.உ.செ (மொத்த உள்நாட்டுக் கேள்வி) நடைமுறை விலைகளில் ரூ.3,946 பில்லியனாக விளங்கி பெயரளவு நியதிகளில் 2006இன் 22.1 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 2007இல் 21.0 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சிடைந்தது. இவ்வளர்ச்சி பொருளாதார விரிவாக்கம் மற்றும் பொது விலை மட்டத்திலான அதிகரிப்பாலும் உச்ச நிலையடைந்தது. 2006இன் உண்மை வளர்ச்சியான 8.6 சதவீதத்துடன் 2007இன் ஊஉண்மை வளர்ச்சியான 5.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் உள்நாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட மெதுவடைவு தெளிவாகத் தெரிகிறது. இம் மெதுவடைவு, விரைவாக அதிகரித்துச் செல்லும் விலை அழுத்தத்தை எதிர்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட பேரளவிலுள்ள கேள்வி முகாமைத்துவக் கொள்கைகளின் விளைவால் ஏற்பட்டது. நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினம் இரண்டும் அதிகரித்த போதிலும், பின்னையது உண்மை நியதிகளில் 8.7 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் வளர்ச்சியடைந்தது. சந்தை விலைகளில் மொ.உ.செ, மொ.உ.உ மற்றும் பொருட்களினதும் பணிகளினதும் தேறிய இறக்குமதிகளின் கூட்டுத்தொகை பெயரளவு நியதிகளில் ரூ.3,578 பில்லியனுக்கு 21.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

### நுகர்வு

**தனியார் துறை மற்றும் அரச துறை இரண்டையும் உள்ளடக்கிய மொத்த நுகர்வுச் செலவினம் 2007ஆம் ஆண்டில் ரூ.2,950 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.** இதன்படி, நுகர்வுச் செலவினம் முன்னைய ஆண்டின் 21.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2007இல் 20.9 சதவீதத்தில் மெதுவடைந்திருந்தது. இவ்வதிகரிப்பு உண்மை நுகர்வுச் செலவில் 4.9 சதவீத வளர்ச்சியையும் பொதுவான விலை மட்டத்தில் 15.3 சதவீத வளர்ச்சியையும் கொண்டிருந்தது. அதிகரித்துச் செல்லும் தலைக்குரிய வருமானம், தொழில்நிலை வாய்ப்புகளின் விரிவாக்கம் மற்றும் வெளிநாட்டு

பணவனுப்பல்களிலான அதிகரிப்பு குடும்ப அலகு நுகர்வில் வளர்ச்சியைத் தூண்டியிருக்கையில் அதிகரித்துச் செல்லும் இலாபகரத்தன்மை கம்பனித்துறை நுகர்வு வளர்ச்சியைத் தோற்றுவித்தது. மொத்த நுகர்வுச் செலவினத்தில் தனியார் நுகர்வின் செலவினம் முன்னைய ஆண்டைப் போலவே 81.5 சதவீதத்தில் தொடர்ந்து காணப்பட்டிருக்கையில் அரச நுகர்வின் பங்கு 18.5 சதவீதமாக விளங்கியது.

**உணவு, பானம் மற்றும் புகையிலை மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2006இன் 41.2 சதவீத பங்கிலிருந்து 2007இல் 39.7 சதவீதப் பங்கிற்கு குறைந்தது.** அதிகரித்துச் செல்லும் வருமான மட்டங்களுடன் இந்நுகர்வுத் தொகுதியின் பங்கு 2002 இலிருந்து உறுதியாக வீழ்ச்சியடைந்த போதிலும் உணவுப் பொருட்களின் விலை மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக 2006இலிருந்து இப்போக்கு நேர்மாறாகியது. உணவுக்கான கேள்வி சார்பு ரீதியில் உறுதியாக இருந்ததால், 2007 காலப்பகுதியில் வருமான மட்டத்தின் அதிகரிப்பானது செலவுப்பங்கிலள் வீழ்ச்சியைத் தந்தது. ஒப்பீட்டளவில் புடவை மற்றும் பாதணிப் பொருட்கள் மீதான செலவிடல் பெயரளவு நியதிகளில் 25.9 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் வளர்ச்சியடைந்திருக்கையில் இத்துறையின் பங்கு 2004வரை 9.9 சதவீதம் வரை உயர்ந்து, அதன் பின்பு படிப்படையாக வீழ்ச்சியடைந்து 2006 இல் 7.6 சதவீதப் பங்குக்கு வகைகூறி மீண்டும் 2007இல் 7.9 சதவீதப் பங்குக்கு அதிகரித்தது.

**2007இல் பல அடிப்படைப் பொது வசதிகளின் விலைகளில் அதிகரிப்பு காணப்பட்டது.** மின் கட்டண வீதங்கள் மேல் நோக்கி திருத்தப்பட்டதுடன் பன்னாட்டுச் சந்தைகளிலான அபிவிருத்திகளுடன் வாயு விலைகள் பல தடவைகள் அதிகரிக்கப்பட்டிருக்கையில், மண்ணெண்ணெய் போன்ற ஏனைய எரிபொருட்களின் விலைகளும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. இவ்விலை அதிகரிப்புக்களுடன் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் மீதான செலவிடல் பெயரளவு நியதிகளில் 33.8 சதவீதத்தால் உயர்வடைந்தது.

**தளபாடங்களை இடுதல், வீட்டுப் பயன்பாட்டுக் கருவிகள் மற்றும் வழமையான பேணல் நடவடிக்கைகள் என்பனவற்றை உள்ளடக்கிய வீட்டுப் பயன்பாட்டுக் கருவிகள் மற்றும் பணிகள் மீதான செலவிடல் நடைமுறை நியதிகளில் அதிகரித்த போதும் பொதுவான நுகர்வின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சி குறைவாகவே இருந்தது.** 13.7 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு குறிப்பாக வழமையான பேணலுக்குப் பயன்படுத்தப்படும் கட்டட மூலப்பொருட்களின் விலைமட்டங்களில் ஏற்பட்ட வளர்ச்சியே முக்கிய காரணமாகும். இது, விலைகளிலான அதிகரிப்புடன் அத்தியாவசியத் தேவைகளின் நுகர்வு முந்திச் சென்றதைப் பிரதிபலிக்கிறது.

**நலப் பணிகள் மீதான செலவினம் 2007இல் தொடர்ந்து விரிவடைந்தது.** கடந்த சில ஆண்டுகளாக மொத்த நுகர்வில் 1.5 சதவீதத்தில் மாறாது விளங்கிய நலச் செலவினத்தின் பங்கு 2007இலும் மாற்றமின்றி விளங்கியது. இதேவேளை, 2002 இலிருந்து 0.1 சதவீதப் பங்குடன் மாறாதிருந்த கல்வி மீதான தனியார் நுகர்வுச் செலவினம் 2007இலும் அதே அளவிலேயே காணப்பட்டது. இப்பணிகள் மீது தனியார் செலவிடலின் சார்பு ரீதியிலான குறைந்த மட்டம், பொதுமக்களுக்கு இப்பணிகளை வழங்கும் அரச துறையால் வகிக்கப்பட்ட கணிசமான பங்கால் ஏற்பட்டதாகும்.

**2007இல் எரிபொருள் விலைகள் பல தடவைகளில் அதிகரிக்கப்பட்டதுடன், இது இவ்வாண்டில் பெயரளவு நியதிகளில் பெற்றோல் மற்றும் டீசல் விலைகளை முறையே 27.2 சதவீதத்தாலும், 25.0 சதவீதத்தாலும் அதிகரிக்கச் செய்தது.** இதனால், இவ்வாண்டில் பேரூந்துக் கட்டணங்கள் மேல்நோக்கித் திருத்தப்பட்டதையடுத்து பொதுமக்கள் போக்குவரத்துப் பணிகள் மீதான கட்டணங்களும் அதிகரித்தன. இதன் விளைவாக, போக்குவரத்து மீதான செலவிடல் 25.5 சதவீதத்தால் அதிகரித்ததுடன் 2007இல் இப்பங்கு 20.4 சதவீதத்திற்கு அதிகரித்தது. கூடியளவுக்கு பொருளாதார ரீதியான ஊர்திகளின் பதிவில் அதிகரிப்பு காணப்பட்ட போதிலும், இவ்வாண்டில் குறிப்பாக, உந்து உருளிகளின் புதிய உந்துருளிப் பதிவில் மெதுவடைவு காணப்பட்டது.

**பொழுதுபோக்கு மற்றும் களியாட்டம், மற்றும் சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் போன்ற ஏனைய நுகர்வுத் தேவைகள் மீதான செலவினம் 12 சதவீதத்திற்கும் கூடுதலாக அதிகரித்தது.** வதிவற்றோரால் செலவிடப்படும் 3.8 சதவீதப் பங்குடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு வதிவோரின் செலவினம் 8.9 சதவீதம் கொண்ட உயர் பங்கிற்கு வகைகூறியது.


**2007இல் அரச துறை நுகர்வுச் செலவினம், முன்னைய ஆண்டிலான 40.6 சதவீதம் கொண்ட கணிசமான உயர் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் பெயரளவு நியதிகளில் 21.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** அரச செலவினத்திலான மெதுவடைவு, பெயரளவு நியதிகளில் வீட்டு அலகுத் துறைக்கான உதவுதொகைகள் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்த போதிலும் அரச துறை கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான உதவுதொகைகளிலும், மாற்றல்களிலும் ஏற்பட்ட வீழ்ச்சியால் ஏற்பட்டதாகும். அத்துடன், மத்திய அரசிலிருந்து மாகாண சபைகள் வரை சகல துறைகளிலுமான அரசதுறை கூலிச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் உயர் வட்டிக் கொடுப்பனவுகள் அரச செலவினத்திலான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.


## முதலீடு :

**முதலீடு மீதான செலவினம் (மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம்) 2006இன் ரூ.822 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2007இல் ரூ.997 பில்லியனுக்கு விரிவடைந்து, பெயரளவு நியதிகளில் 21.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** எனினும், மொ.உ. உற்பத்திக்கான முதலீட்டு விகிதம் 2006இன் 28.0 சதவீதத்திலிருந்து 27.9 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்து முதலீட்டுச் செயற்பாடுகளிலான குறைந்த வளர்ச்சியை எடுத்துக் காட்டியது. 2007இற்கான முதலீட்டுச் செயற்பாடுகளிலான உண்மை வளர்ச்சி 8.7 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

**அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் பங்களிப்பை உள்ளடக்கிய தனியார் முதலீடு 2007இல் 14.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து, முன்னைய ஆண்டின் 27.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மோசமான பாதுகாப்பு**

**வரைபடம் 2.4** ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டுச் சபைச் செயற்றிட்டங்கள்




(அ) விரிவடைந்த செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ஆ) மிகின் லங்கா பிறைவேற் லிமிட்டெட் மீதான ரூ.3,616 மில்லியன் கொண்ட உள்நாட்டு முதலீடு நீங்கலாக

**நிலைமைக்கு மத்தியிலும் தொடர்ச்சியான முதலீட்டாளர் நம்பகத்தன்மையைப் பிரதிபலிக்கிறது.** தனியார் துறை முதலீடு மொத்த முதலீட்டின் 81.0 சதவீதப் பங்குக்கு வகைகூறியது. குறிப்பாக, தயாரிப்பு, தொலைத் தொடர்பூட்டல், உண்மைச் சொத்து மற்றும், தனியார் நலக் கவனிப்பு மற்றும் கல்விப் பணிகள் போன்ற ஏனைய தனியாள் பணிகள் போன்ற துறைகளில் முதலீட்டாளர் நம்பகத்தன்மை புலப்பட்டது. இவற்றின் உயர் இறக்குமதி அளவுகள் அதேபோல் வெளிநாட்டு நேரடி முதலீடு என்பவற்றிலும் முதலீட்டு நியதிகளில் அதிகரித்த செயற்பாட்டு மட்டங்கள் பிரதிபலிக்கப்பட்டன.

**வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2007இல் ஐ.அ.டொலர் 734.4 மில்லியனுக்கு 21.6 சதவீதத்தால் அதிகரித்தன.** தொலைத் தொடர்பூட்டல் துறை நாட்டிற்குள் வரும் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களின் 50 சதவீதத்திற்கும் கூடுதலான அளவுக்கு வகை கூறியது. நாட்டுக்குள் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டை கவருவதற்கும், ஊக்குவிப்பதற்கும் பொறுப்பாகவுள்ள அரச உச்ச நிறுவனமான முதலீட்டுச்சபை 2007இல் வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகரிப்பதற்கான முக்கிய பங்கை தொடர்ந்து வகித்தது. வெளிநாட்டு நேரடி முதலீட்டில் 70 சதவீதத்திற்கும் மேலானவை தொலைத் தொடர்பூட்டல் வலு உருவாக்கம், வீடமைப்பு மற்றும் அலுவலக கட்டடத் தொகுதி அபிவிருத்தி என்பனவற்றை உள்ளடக்கிய உட்கட்டமைப்பு அபிவிருத்திகளில் முதலீடு செய்யப்பட்டது.

**முதலீட்டுச்சபை 2006இல் ரூ.339.8 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் ஒப்புதலளிக்கப்பட்ட 364 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் 2007இல் முதலீட்டுச்சபை சட்டத்தின் பிரிவுகள் 16 மற்றும் 17இன் கீழ் ரூ.489.4 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் 605 புதிய செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது.** அதிகரித்த முதலீட்டு உட்பாய்ச்சல் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீடுகள் இரண்டிலும் பிரதிபலிக்கப்பட்டது. முதலீட்டுச்சபை சட்டத்தின் பிரிவு 17இன் கீழ் 2007இல் விரிவாக்கத்துக்காக ரூ.154.5 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் 87 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டன. முதலீட்டுச்சபைச் செயற்றிட்டங்களில் அடையப்பட்ட மொத்த முதலீடு 2006இன் ரூ.468 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2007இல் ரூ. 600.8 பில்லியனுக்கு 28.4 சதவீதத்தால் அதிகரித்தது.

**முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 17 மற்றும் 16இன் கீழ் 2007இல் 605 புதிய செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டதுடன், இவற்றில் 323 செயற்றிட்டங்கள் இலங்கை முதலீட்டாளர்களுக்கும், 167 வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் சொந்தமாகவிருக்கையில் எஞ்சியவை கூட்டு முயற்சிகளாக விளங்கின.** முதலீட்டுப் பாய்ச்சல்களின் முக்கிய பெறுநர்களாக பணிகள் துறை தொடர்ந்து விளங்கி ரூ.543.6 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் 356 செயற்றிட்டங்களை ஈர்த்திருக்கையில் தொழிற்சாலைக் கைத்தொழில் 2007இல் ரூ.86.6 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் 249 செயற்றிட்டங்களை ஈர்த்தது. பணிகள் துறையின் முக்கிய பெறுநர்களாக வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி, தொலைத் தொடர்பூட்டல், மருத்துவமனைப் பணிகள், சுற்றுலா விடுதிகள், உணவகங்கள் மற்றும் களியாட்டம், வலு உருவாக்கம் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் விளங்கின. தொழிற்சாலைக் கைத்தொழிலில், முதலீட்டின் 90 சதவீதத்திற்கும் கூடியவை உணவு, பானங்கள் மற்றும் புகையிலை, உற்பத்திகள் புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள், உருவமைக்கப்பட்ட உலோகம், பொறி மற்றும் போக்குவரத்துக் கருவி, உற்பத்திகள் இரசாயனம், பெற்றோல், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் மற்றும் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்தி வகைகள் விளங்கின.

**முதலீட்டுச்சபை சட்டம் பிரிவு 17இன் கீழ் 2007இல் ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டின் ரூ.160.6 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் பணிகள் துறை 154 செயற்றிட்டங்களை ஈர்த்திருக்கையில் ரூ.20.6 பில்லியன் தொழிற்சாலைக் கைத்தொழிலால் ஈர்க்கப்பட்டது.** முக்கிய பெறுநர்களாக வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி, தொலைத் தொடர்பூட்டல், வலு உருவாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களை உள்ளடக்கியிருந்தன. 2007இல் ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டின் முக்கிய பெறுநர்களாக தொழிற்சாலைக் கைத்தொழில் துறையினுள் புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள், இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள், உணவு, பானம் மற்றும் புகையிலை உற்பத்திகள், உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் மற்றும் உருவமைக்கப்பட்ட உலோகப் பொறி மற்றும் போக்குவரத்துக் கருவி உற்பத்தி வகைகள் விளங்கின. 2007இல் ஒப்பந்த செய்யப்பட்ட 48 செயற்றிட்டங்கள் ரூ.70.4 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் விரிவடைந்தன.

**முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 17 மற்றும் 16இன் கீழ்**

**அட்டவணை 2.13**

**இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்**

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உண்மையான முதலீடுகள் (ரூ.மில்லியன்) | | | | | | தொழிலாளர் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2006(அ) | 2007(ஆ) | 2006(அ) | | | 2007(ஆ) | | | 2006(அ) | 2007(ஆ) |
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | |
| **முதலீட்டுச்சபை** | | | | | | | | | | |
| ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 401 | 692 | 231,738 | 146,821 | 378,558 | 307,093 | 336,786 | 643,879 | 87,550 | 126,773 |
| பிரிவு 17இன் கீழ் (ஈ) | 349 | 652 | 223,106 | 134,487 | 357,593 | 304,639 | 336,074 | 640,713 | 72,668 | 124,161 |
| பிரிவு 16இன் கீழ் | 52 | 40 | 8,632 | 12,334 | 20,965 | 2,454 | 712 | 3,166 | 14,882 | 2,612 |
| பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தம் | 247 | 303 | 39,898 | 83,677 | 123,575 | 122,671 | 128,955 | 251,626 | 45,063 | 63,590 |
| பிரிவு 17இன் அடையப்பட்ட முதலீடுகள் (ஈ) | 1,929 | 1,976 | 285,366 | 182,651 | 468,017 | 363,029 | 237,749 | 600,778 | 421,271 | 451,934 |
| வர்த்தகத் தொழிற்பாடுகள் (இ) | 2,460 | 2,418 | 185,106 | 177,664 | 362,770 | 185,458 | 180,969 | 366,427 | 386,835 | 376,947 |
| பிரிவு 17இன் கீழ் (இ)(ஈ) | 1,655 | 1,608 | 167,598 | 167,210 | 334,808 | 167,728 | 170,480 | 338,208 | 349,652 | 339,670 |
| பிரிவு 16இன் கீழ் (இ) | 805 | 810 | 17,508 | 10,454 | 27,962 | 17,730 | 10,489 | 28,219 | 37,183 | 37,277 |
| **கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு** | | | | | | | | | | |
| பதிவு செய்யப்பட்ட செயற்றிட்டங்கள் (இ) | 1,629 | 1,667 | வி.கி | வி.கி | 119,344 | வி.கி | வி.கி | 121,456 | 273,553 | 275,883 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை
(ஈ) விரிவாக்கப்பட்ட செயற்த்திட்டங்கள் உள்ளடங்கலாக

மூலங்கள் : இலங்கை முதலீட்டுச் சபை
கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு

**வர்த்தகத் தொழிற்பாட்டை ஆரம்பித்த செயற்றிட்டங்கள் 2006இன் 2,460 இலிருந்து 2007இல் 2,418 இற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.** தொழிற்சாலைக் கைத்தொழிலின் துணை வகைகளினுள், 342 செயற்றிட்டங்கள் புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் வகையிலும் 180 செயற்றிட்டங்கள் உணவு, பானம் மற்றும் புகையிலை உற்பத்தி வகையிலும் 165 செயற்றிட்டங்கள் இரசாயனம் பெற்றோல், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு வகையிலும் மற்றும் 100 செயற்றிட்டங்கள் உருவமைக்கப்பட்ட உலோகம், பொறி மற்றும் போக்குவரத்துக் கருவி வகையிலும் காணப்பட்ட வேளையில் பணிகள் துறை 1,191 செயற்றிட்டங்களை ஈர்த்தன. இதேவேளை, பதனிடப்படும் வலயங்களுக்கு வெளியே 2007 இறுதியில் 95 செயற்றிட்டங்கள் அமைந்திருந்தன.

**2006இன் 10.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், 2007இல் அரச துறை முதலீடு 61 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் விரிவடைந்து 2007இற்கான 38.2 சதவீத உயர் வளர்ச்சியாக உருமாறியது.** அரச துறை முதலீடு குறிப்பாக நெடுஞ்சாலைகள் மற்றும் பாதைகளின் நிர்மாணம் மற்றும் புனருத்தாபனத்தில் காணப்பட்டதுடன் அதேபோல் வலுத்துறைச் செயற்றிட்டங்கள் இவ்வாண்டில் தனியார்துறை பங்கேற்புடன் நடைபெற்றது. அரசின் மேலதிக ஈடுபாடு கல்வி மற்றும் நலக் கவனிப்பு போன்ற சமூக மேம்பாட்டை இலக்கிட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் காணப்பட்டது.

## மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்

**பொருளாதாரத்தில் மொத்த மூலவளத்தின் கிடைப்பனவு மொ.உ.உற்பத்தியாலும் பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகளாலும் தரப்பட்டுள்ளது.** இது 2007இற்காக ரூ.4,992 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் முன்னைய ஆண்டின் 19.7 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 20.4 சதவீதம் கொண்ட பெயரளவு வளர்ச்சியைக் காட்டியது. உள்நாட்டு மூலவளங்கள், 2007இல் வெளிநாட்டு மூலங்களிலான 17.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 21.8 சதவீதம் கொண்ட உயர் வீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதனால், மொத்த மூலவளக் கிடைப்பனவில் உள்நாட்டு மூலவளங்களின் பங்கு 2006இன் 71 சதவீதத்திலிருந்து 72 சதவீதத்திற்கு அதிகரித்திருக்கையில் எஞ்சிய 28 சதவீதம் வெளிநாட்டு மூலவளங்களின் கிடைப்பனவாக விளங்கியது. உண்மை நியதிகளில், மொத்த மூலவளக் கிடைப்பனவிலான வளர்ச்சி 6.1 வீதமாக இருந்ததுடன், இது 6.8 சதவீதத்தால் அதிகரித்த உள்நாட்டு மூலவளங்களினதும் 4.4 வீதத்தால் அதிகரித்த வெளிநாட்டு மூலவளங்களினதும் இணைந்த வளர்ச்சியாகும்.

**மூலவளங்கள் நுகர்வு, மூலதன உருவாக்கம் மற்றும் பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிக்காகப் பயன்படுத்தப்பட்டன.** இதில், மொத்த மூலவளங்களில் ஆகக் கூடிய பங்கான 59 சதவீதம் நுகர்வுக்காகவும், பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளுக்காக 21 சதவீதப் பங்கும்

**அட்டவணை 2.14**

**நிலையான விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும்**


| விடயம் | சதவீதப் பங்கு | | சதவீத வளர்ச்சி | |
|---|---|---|---|---|
| | 2006 | 2007(அ) | 2006 | 2007(அ) |
| **அ. மூலவளங்கள்** | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 70.9 | 71.7 | 19.8 | 21.8 |
| பொருட்கள்,பணிகளினது இறக்குமதிகள் | 29.1 | 28.3 | 19.4 | 17.0 |
| **மொத்தம்** | 100.0 | 100.0 | 19.7 | 20.4 |
| **ஆ. பயன்பாடு** | | | | |
| நுகர்வு | 58.8 | 59.1 | 21.2 | 20.9 |
| மொத்த உள்நாட்டு | | | | |
| நிலையான மூலதனவாக்கம் | 17.6 | 17.7 | 27.5 | 21.0 |
| தனியார் | 15.1 | 14.3 | 30.5 | 14.3 |
| அரசு | 2.6 | 3.4 | 12.3 | 61.0 |
| இருப்புக்களின் மாற்றம் | 2.2 | 2.2 | 7.7 | 22.7 |
| பொருட்கள், பணிகளினது ஏற்றுமதிகள் | 21.3 | 21.0 | 11.6 | 18.1 |
| **மொத்தம்** | 100.0 | 100.0 | 19.7 | 20.4 |

(அ) தற்காலிகமானவை


மூலங்கள்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 2.5** 2007 இல் பொருளாதாரம் (நடைமுறை விலைகளில்)

பொருட்கள் மற்றும் பணிகளின் வழங்கல் (ரூ.4,992 பில்லியன்)




பொருட்கள் பணிகளுக்கான கேள்வி (ரூ. 4,992 மில்லியன்)




பயன்படுத்தப்பட்டிருக்கையில் எஞ்சிய 20 சதவீதம் மூலதன உருவாக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்டது. மூலதன உருவாக்கத்தின் சிறிதளவான வளர்ச்சியுடன் நுகர்வு மற்றும் மூலதன உருவாக்கத்துக்கான மூலவளங்களின் பயன்பாடு 20 சதவீதத்திற்கும் கூடுதலாக வளர்ச்சியடைந்திருக்கையில் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் 18 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன.

**பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த வழங்கல் உள்நாடு அதேபோல் வெளிநாட்டு மூலங்கள் இரண்டையும் உள்ளடக்குகிறது.** இதில் உள்நாட்டுப் பணிகள் 42 சதவீதப் பங்கைக் கொண்டிருந்தன.முன்னைய ஆண்டைப் போல வெளிநாட்டுப் பொருட்களின் பங்கு 30.0 சதவீதமாகக் காணப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் வழங்கல் 2006இன் 26 சதவீதம் பங்கிலிருந்து 2007இல் 25 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருக்கையில் இறக்குமதி செய்யப்பட்ட பணிகளின் பங்கு 3 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது.

**கேள்விப்பக்கத்தில், நுகர்வு, முதலீடு மற்றும் வெளிநாட்டுக் கேள்வியின் முக்கிய கூட்டுக்களின் பங்கு 2006 உடன் ஒப்பிடுகையில் மாற்றமின்றித் தொடர்ந்து விளங்கியது.** நுகர்வு மற்றும் முதலீட்டை உள்ளடக்கிய உள்நாட்டுக் கேள்வி, அதன் பங்கு 2002இன் 75 சதவீதத்திலிருந்து 2006இல் 79 சதவீதத்திற்கான அதிகரிப்புடன் கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்துச் செல்லும் போக்கைக் கொண்டிருந்ததுடன் உள்நாட்டுத் துறையில் உயர் வளர்ச்சிப் பங்களிப்பை எடுத்துக்காட்டுகிறது. இதன் விளைவாக, வெளிநாட்டுக் கேள்வியின் பங்கு 2002இன் 25 சதவீதத்திலிருந்து 2006இல் 21 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எமது நாடு சிறிதாக விளங்குவதால் உள்நாட்டுக் கேள்வியிலான வளர்ச்சிக்கு கட்டுப்பாடு இருப்பதன் காரணமாக நீண்டகால வளர்ச்சி உத்வேகம் நீடித்து, நிலைத்திருக்க வேண்டுமாயின் நாடு வெளிநாட்டுத் துறையின் விரிவாக்கத்தினூடாக அதன் எதிர்கால வாய்ப்பு வளத்தை அடைவது தவிர்க்க முடியாததாகும்.

## சேமிப்புகள்

**2007இல் நுகர்வுச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு மத்தியிலும் உள்நாட்டுச் சேமிப்புக்கள் மற்றும் தேசிய சேமிப்புக்கள் இரண்டும் அதிகரித்தன.** உள்நாட்டுச் சேமிப்புக்கள் 26 சதவீதத்தால் அதிகரித்து, உள்நாட்டுச் சேமிப்பு விகிதத்தையும் (உள்நாட்டுச் சேமிப்புக்கள்/ மொத்த உள்நாட்டு உற்பத்தி) 17 சதவீதத்திலிருந்து 17.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. உள்நாட்டு சேமிப்புக்கள் விகிதத்திலான அதிகரிப்பு அதேபோல் முதலீட்டு விகிதத்திலான சிறிதளவு

**அட்டவணை 2.15** நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்புக்கள்

| விடயம் | ரூ. மில்லியன் | | சதவீத மாற்றம் | | மொ.உ.உ.வின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2006 | 2007(அ) | 2006 | 2007(அ) | 2006 | 2007(அ) |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 2,938,656 | 3,578,386 | 19.8 | 21.8 | 100.0 | 100.0 |
| 2. நுகர்வுச் செலவினம் | 2,439,816 | 2,949,712 | 21.2 | 20.9 | 83.0 | 82.4 |
| தனியார் | 1,988,378 | 2,403,167 | 17.5 | 20.9 | 67.7 | 67.2 |
| அரசு | 451,438 | 546,545 | 40.6 | 21.1 | 15.4 | 15.3 |
| 3. முதலீடு | 822,216 | 996,700 | 25.0 | 21.2 | 28.0 | 27.9 |
| தனியார் | 703,044 | 804,495 | 27.9 | 14.4 | 23.9 | 22.5 |
| அரசு | 119,172 | 192,204 | 10.0 | 61.3 | 4.1 | 5.4 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 498,840 | 628,674 | 13.6 | 26.0 | 17.0 | 17.6 |
| தனியார் | 568,967 | 686,380 | 13.2 | 20.6 | 19.4 | 19.2 |
| அரசு | -70,127 | -57,706 | -10.3 | 17.7 | -2.4 | -1.6 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி | -323,376 | -368,026 | -47.6 | -13.8 | -11.0 | -10.3 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -40,424 | -38,808 | -34.5 | 4.0 | -1.4 | -1.1 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றங்கள் | 197,861 | 245,006 | 13.4 | 23.8 | 6.7 | 6.8 |
| 8. தேசிய சேமிப்புக்கள் | 656,278 | 834,872 | 12.5 | 27.2 | 22.3 | 23.3 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிவபர திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வீழ்ச்சி காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக, உள்நாட்டுச் சேமிப்புகளுக்கும் முதலீட்டுக்குமிடையேயான வேறுபாடான மூலவள இடைவெளி 2007இல் குறைவடைந்தது.

**தனியார் மற்றும் அரச சேமிப்புக்கள் இரண்டையும் உள்ளடக்கிய உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ.629 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இதில் தனியார் சேமிப்புக்கள் ரூ.686 பில்லியனாக விளங்கி அரசின் குறைச் சேமிப்புக்களான ரூ.58 பில்லியனை போதுமானளவுக்கு ஈடுசெய்யப் போதுமானதாகும்.** கம்பனித் துறையிலான அதிகரித்த இலாபகரத்தன்மை நிறுவன ரீதியான சேமிப்புக்கள் மீது நேர்க்கணியத் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கையில் வட்டி வீதங்களிலான அதிகரிப்பு குடும்ப அலகு சேமிப்புக்களை ஊக்கப்படுத்தின. இதேவேளை, அரச வரவு செலவுத்திட்டத்தின் நடைமுறைக்கணக்கு நிலுவையாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட அரச சேமிப்புக்கள் எதிர்க்கணியமாக விளங்கிய போதிலும் 2006 உடன் ஒப்பிடுகையில் 17.7 சதவீதத்தால் மேலும் முன்னேற்றமடைந்தது.

**உள்நாட்டுச் சேமிப்புக்கள், வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் மற்றும் வெளிநாட்டு தனியார் மாற்றல்கள் என்பவற்றின் கூட்டுத்தொகையான தேசிய சேமிப்புக்கள் ரூ.835 பில்லியனுக்கு 27 சதவீதத்தால் அதிகரித்தன.** வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் மற்றும் தேறிய தனியார் மாற்றல்கள் இரண்டினதும் சாதகமான செயலாற்றம் இம்முன்னேற்றத்துக்குப் பொறுப்பாக விளங்கியது. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் எதிர்க்கணியமாக விளங்கிய போதிலும் அலுவல்சார் ஒதுக்குகள் அதேபோல் தனியார் துறையின் வெளிநாட்டு நிதியியற் சொத்துக்களிலிருந்தான அதிகரித்த வட்டி வருமானங்களின் முக்கிய காரணத்தால் 2007இல் முன்னேற்றமடைந்தது. தொழிலாளர் பணவனுப்பல்களை உள்ளடக்கிய தேறிய மாற்றல்கள் 2007இல் ரூ.245 பில்லியனுக்கு 24 சதவீதத்தால் அதிகரித்தன. இதன்படி, தேசிய சேமிப்புக்கள் விகிதம் (தேசிய சேமிப்புக்கள்/ மொ.உ.உ) 22.3 சதவீதத்திலிருந்து 23.3 சதவீதத்திற்கு அதிகரித்தது.க

## சிறப்புக் குறிப்பு 6

## சமநிலையான பிராந்திய அபிவிருத்தி

வாய்ப்புக்களிலும் அதேபோன்று குறிப்பிடத்தக்களவு பிராந்திய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு அடிக்கடி வழிவகுக்கின்றதான செல்வப் பங்கீட்டிலும் சமவாய்ப்புக்களைப் பெறாத மக்களுக்கு சிறந்த வாழ்வாதாரத்தினை வழங்குவதற்காக நாடுகள் அயராது முயற்சிக்கின்றன. உண்மையில் மிகச் சிறந்த வளர்ச்சி உபாயங்கள், மேம்பட்ட பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பினூடாக நாட்டின் வேறுபட்ட பகுதிகள் ஒரேவிதமான வீதத்தில் வளர்ச்சியடையக்கூடிய சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும். இத்தகைய ஒரு நிலைமையில் பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள் அனைத்து குடிமகன்களுக்கும், அவர்கள் வாழும் பிராந்தியத்தைக் கருத்திற் கொள்ளாது கிடைக்கக் கூடியதாகவிருக்கும். இதனை அடைவது இலகுவாக இல்லாத போதிலும், சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களும் சமூக செயற்றிறன், அரசியல் ரீதியான செல்வாக்கு மற்றும் பொருளாதார வினைத்திறன் உள்ளவராக வருவதற்குரிய சமமான வாய்ப்புக்களைக் கொண்டிருக்கக்கூடிய சூழலை உருவாக்கும் கொள்கைகள் நடைமுறைப்படுத்துவதற்கான திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் அவதானமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

**நடைமுறையிலுள்ள பிராந்திய பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்**

சுதந்திரம் பெற்றதிலிருந்து இலங்கையில் தொடர்ந்து வருகின்ற அரசாங்கங்கள் பிராந்திய பொருளாதாரத்தை

**அட்டவணை - சி.கு. 6.1**
**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மாகாண ரீதியான பங்கு மற்றும் தலா வருமானம் - 2006**

| மாகாணம் | மொ.உ.உ. பங்கு (மூ) | தலா வருமானம் (ரூ.) |
|---|---|---|
| மேல் மாகாணம் | 50.1 | 225,598 |
| தென் மாகாணம் | 9.3 | 97,377 |
| சப்பிரகமுக மாகாணம் | 6.2 | 82,575 |
| மத்திய மாகாணம் | 8.8 | 85,833 |
| ஊவா மாகாணம் | 4.6 | 92.615 |
| கிழக்கு மாகாணம் | 4.7 | 75,364 |
| வட மேற்கு மாகாணம் | 9.3 | 103,792 |
| வட மத்தி மாகாணம் | 4.1 | 88,333 |
| வடக்கு மாகாணம் | 2.9 | 64,185 |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

உயர்த்துவதற்கென வடிவமைக்கப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளன[1]. இத்தகைய முயற்சிகள் இருந்தபோதிலும், நாட்டினுள் குறிப்பிடத்தக்க பிராந்திய பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்தும் இருப்பதுடன் இந்த நிலைமையானது அரசாங்கத்திற்குக் கடுமையான சவாலை இயல்பாக ஏற்படுத்துவதாகவுமுள்ளது. 2006ஆம் ஆண்டில் மேல் மாகாணமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 50.1 சதவீதத்திற்கு வகைகூறிய அதேவேளையில் ஏனைய

[1] இவை குடியேற்றங்களை நிறுவுதல் கல் - ஓயா, வளவ மற்றும் மகாவலி, ஏனையவை போன்ற நீர்ப்பாசனத் திட்டங்கள், ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டங்கள், பரவலான வரவு செலவுத்திட்டம், மாவட்ட அபிவிருத்தி சபைகள் மற்றும் மிகவும் முக்கியமாக 1987இல் நிறுவப்பட்ட மாகாண சபைகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. மேலும், அரசாங்க வரவு செலவுத்திட்டமானது பிராந்திய அபிவிருத்தியை குறிக்கோளாகக் கொண்ட பல்வேறுபட்ட செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கென ஆண்டு தோறும் ஒரு குறிப்பிட்ட தொகை நிதியை ஒதுக்கின்றது.

**வரைபடம் சி.கு. 6.1**

**மொ.உ. உற்பத்தியில் துறைவாரியான உள்ளடக்கம் - 2007**




ஒவ்வொரு மாகாணமும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 10 சதவீதத்திற்கும் குறைவான அளவிற்கே வகைகூறின (அட்டவணை - சி.கு. 6.1). தலைக்குரிய அடிப்படையிலும் கூட மேல் மாகாணமானது ஏனைய மாகாணங்களிலும் பார்க்க அதிக முன்னணியில் உள்ளது. மேலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான பங்களிப்பும் கூட, குறிப்பாக பணிகள் மற்றும் கைத்தொழில் துறைகளும் அதேமாதிரியான போக்கையே காட்டின (வரைபடம் - சி.கு. 6.1).

இருந்தபோதிலும், கல்விப் பேறு மற்றும் நலவசதிகளைப் பொறுத்தவரையில் சமூகக் குறிகாட்டிகள் மாகாணங்களுக்கிடையில் ஒப்பீட்டளவில் குறைந்தளவான இடைவெளியை வெளிப்படுத்தகின்றமை முக்கியமாக குறிப்பிடப்பட வேண்டியதொன்றாகும். எனினும், இந்தப் பிரதேசங்களை மேல் மாகாணத்துடன் ஒத்திருக்கும் விதத்தில் அல்லது மேல் மாகாணத்தில் நிலவும் நிலைகளுக்கு அண்மித்ததாக உருவாக்குவதற்கு மேலும் முன்னேற்றங்கள் தேவையாகவுள்ளன.

## மாகாண ரீதியான ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு முன்னெடுக்கப்படும் முயற்சிகள்

குடித்தொகையில் ஏறத்தாழ 70 சதவீதத்தினர் மேல் மாகாணத்திற்கு வெளியே வசிப்பதன் காரணமாக பொருட்கள் மற்றும் பணிகளுக்கான கேள்வியில் குறிப்பிடத்தக்களவான அதிகரிப்பு கிராமிய துறையிலிருந்தே ஏற்படுகின்றது. மூலவளங்களை வினைத்திறனுடன் ஒதுக்கீடு செய்வதனை உயர்த்தும் பொருட்டு அரசாங்கம் வளர்ச்சியை உள்ளடக்கிய உபாயம் என்பதனை தொடங்கியிருப்பதுடன் இதன் மூலம் வளர்ச்சியின் நன்மைகள் இலங்கையின் கிராமங்களிலுள்ள மக்களுக்கும் சென்றடைவது உறுதிப்படுத்தப்படும். பிராந்திய அபிவிருத்தி மீதான அரசாங்கத்தின் கொள்கையானது பத்தாண்டு அபிவிருத்திக் கட்டமைப்பு: 2006 - 2016 (பத்தாண்டு தொலைநோக்கு) இல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. பத்தாண்டு தொலைநோக்கின் கீழ், தேவைப்படும் பிரிவுகளுக்கு பாதுகாப்பான வலையமைப்பை வழங்கும் அதேநேரத்தில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மனித மூலதன அபிவிருத்தி மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி போன்ற கலவையினூடாக தீவு முழுவதிலும் சமூக பொருளாதார நிலைமைகளை முன்னேற்றுவதற்கு அரசாங்கம் அதன் அர்ப்பணிப்பினை வெளிப்படுத்தியிருக்கிறது. இது பிரதானமான நேரடி முதலீடுகள் தவிர, அரச தனியார் பங்குடமை மற்றும் மாகாணங்களின் மூலவளங்களின் பயன்பாட்டை முன்னேற்றுவதில் கவனம் செலுத்தி வருகின்றது. இந்த வழியானது தனியார்துறை மற்றும் அரசதுறை என்பன வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியின் இணைந்த பொறியாக மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய மட்டத்திலான பொதுவான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக, குறிப்பிட்ட வலயங்கள் மற்றும் பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கான அரசாங்கத்தின் முக்கிய நிகழ்ச்சித்திட்டங்கள் கமநெகும மற்றும் மகா நெகுமா நிகழ்ச்சித்திட்டங்கள், பனை மரத்தோப்பிறகப்பால், கிழக்கின் மறுமலர்ச்சி, செங்கடகல மறுமலர்ச்சி, ரஜரட்ட மீள் எழுச்சி. வடக்கு மேற்கு மறுமலர்ச்சி, வெல்லச மீள் எழுச்சி மற்றும் குருசி நவோதயா என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட பாரிய உட்கட்டமைப்பான மகிந்த ரண்டோர நிகழ்ச்சித்திட்டமும் பிராந்தியங்களில் சாதகமான விளைவைக் கொண்டிருக்கும்.

இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் வீடுகளின் மீள் நிர்மாணம் மற்றும் சீரமைப்பு, இடம் பெயர்ந்த குடும்பங்களை மீளக் குடியமர்த்துதல் மற்றும் அரச அலுவலகங்களை நிறுவுதல், பிராந்திய வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள். தொலைத் தொடர்பூட்டல்கள், நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல், மற்றும் மின்வலு உள்ளடங்கலான கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பிராந்திய மட்டத்தில் மீன்பிடித்துறையின் அபிவிருத்தியை வசதிப்படுத்தல், நிதியிடுதல் வசதிகளுக்கான ஏற்பாடு, நலம் மற்றும் கல்வி அபிவிருத்தி, பயிற்சி மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி புதிய கைத்தொழில்களை நிறுவுதல் மற்றும் சிறிய, நடுத்தர தொழில் முயற்சித்துறையை முன்னேற்றுதல், கிராம ஏழைகளின் நிலமில்லாப் பிரச்சனைகளத் தீர்த்தல், கிராமப் பகுதிகளில் இருக்கும் தேர்ச்சி குறைந்த தொழிற்படைகளுக்கு மீள் பயிற்சியளித்தல், வெள்ளப் பெருக்கு, வறட்சி போன்ற இயற்கை அனர்த்த விளைவுகளைக் குறைத்தல் மற்றும் சமூகங்களுக்கிடையிலும், அரச அலுவலர்கள் மற்றும் தனியார் துறைக்கிடையிலும் தொடர்பினை முன்னேற்றுதல் போன்ற பல முக்கிய விடயங்களுக்கு தீர்வாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசாங்கமானது மேலும் பிராந்திய பொருளாதாரத்தை முன்னேற்றுவதை நோக்காகக் கொண்டு பல எண்ணிக்கையான ஊக்குவிப்புக்களையும் வசதிகளையும் தேசிய வரவு செலவுத்திட்டத்தினூடாக வழங்கியுள்ளது. கொழும்பு மாவட்டத்திற்கு வெளியிலான மாகாணங்களில் முதலீடு செய்வதற்கான இறை ஊக்குவிப்புக்களின் ஏற்பாடு, முந்நூறு தொழிற்சாலைகள் நிகழ்ச்சித்திட்டம், லங்கா புத்ர அபிவிருத்தி வங்கியின் உருவாக்கம், குறிப்பாக வேளாண்மை, கைத்தொழில் மற்றும் மீன்பிடித்துறைகளுக்கான பல்வேறுபட்ட வரி ஊக்குவிப்புக்கள் மற்றும் பாரம்பரியமற்ற வேளாண்மை ஏற்றுமதிகளின் முன்னேற்றம் என்பன அவற்றுள் உள்ளடங்குகின்றன.

## மாகாண சபைகளின் பங்கு

சமநிலையான பிராந்திய அபிவிருத்தியின் நோக்கில் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கு மாகாண சபைகளும் மிகவும் வினைத்திறனான முறையில் பங்காற்ற முடியும். 1987ஆம் ஆண்டு சட்டவாக்கத்தின் பதின்மூன்றாவது திருத்தத்துடன் செயற்பாட்டுக்கு வந்த மாகாண சபை முறைமையானது, தற்போது இரண்டு தசாப்தங்களாக நடைமுறையிலுள்ளது. மாகாண சபைகளின் செயற்பாடுகளின் நெருக்கமான கவனிப்பானது, அது நீண்ட காலமாக செயற்பட்டு வருகின்ற போதிலும் அதன் நோக்கங்களில் ஒன்றான சமநிலையான பிராந்திய அபிவிருத்தி இன்னும் அடையப்படாததை வெளிப்படுத்துகின்றது. மேலே குறிப்பிடப்பட்டதன்படி, சமூகக் குறிகாட்டிகள் குறிப்பிடத்தக்க இடைவெளியைப் பிரதிபலிக்காத போதிலும் பிராந்திய பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் தொடர்ந்தும் நிலவுவதுடன், அவை அதிகரிப்பது போலவும் தோன்றுகின்றது. அநேகமாக மாகாண சபைகள் சில முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. ஆனாலும் மாகாணங்களில் பாராட்டத்தக்க மாற்றங்கள் எதுவும் இதுவரையில் காணப்படவில்லை. மேல் மாகாணமானது தொடர்ந்தும் நாட்டின் பிரதான வருமானம் ஈட்டும் மாகாணமாகவும், முக்கிய செலவின மாகாணமாகவும் விளங்குகின்றது. இதனால் மாகாண சபைகள் பிராந்திய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு புதுப்பிக்கப்பட்ட முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்[2].

மாகாண ரீதியான வெளியீட்டை அதிகரிப்பதற்கும் பிராந்திய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்குமான முக்கிய அணுகுமுறைகளில் ஒன்று மாகாணங்களில் அரச முதலீட்டை அதிகரித்தலாகும். இருந்தபோதிலும் அரச மூலவளங்கள் வரையறுக்கப்பட்டதாக இருப்பதுடன், மேலே குறிப்பிடப்பட்டதன் படி மத்திய அரசாங்கமானது பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் நோக்குடன் ஏற்கனவே பல செயற்றிட்டங்களை பிராந்தியங்களில் நடைமுறைப்படுத்துகின்றது. இந்த நிலைமையானது மாகாண சபைகள் அவற்றின் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான போதிய நிதியை வழங்குவதில் அரசாங்கத்திற்கு இடர்ப்பாடுகளை தோற்றுவிக்கின்றது.

இத்தகைய ஒரு நிலைமையில், அனைத்து ஆர்வலர்களுக்கும் குறிப்பாக மாகாண சபைகளுக்கு, பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு உதவும் வகையில் ஏற்படக்கூடிய சவால்களுக்கு வினைத் திறனாக முகங்கொடுப்பதற்காக தங்களைத் தாங்களே மீளாய்வு செய்தல், மீள ஒழுங்கமைத்தல் மற்றும் மீள் வலுவூட்டுவதற்கான தேவை ஏற்படுகின்றது. இந்த செயற்பாட்டில் மாகாண சபைகள் அவற்றின் பலங்கள், வாய்ப்புக்கள் அவற்றிற்கான மாகாண ரீதியிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான குறிப்பிட்ட காலத்திற்கான பேரண்ட ரீதியிலான முக்கிய இலக்குகள், மாகாண ரீதியிலான தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி, துறை வாரியான வெளியீட்டு இலக்குகள் மற்றும் முதலீட்டு இலக்குகள் என்பவற்றை தயாரிக்க வேண்டியுள்ளது. மாகாண சபைகளுக்கான பேரண்ட இலக்குகளை தயாரிக்கும் போது, மேல் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சாத்தியமான வளர்ச்சி வீதத்தினை அடிப்படையாகப் பயன்படுத்தப்படலாம். ஏனைய மாகாணங்களின் மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம், மேல் மாகாணத்தின் கடந்த கால வேக அளவில் அதிகமான அளவிலும் வளர்ச்சியடைவதற்கு இலக்கிடப்பட வேண்டும். இது கடினமான ஒரு இலக்காக இருக்கக்கூடும். ஆனால், இத்தகைய ஒரு உபாயம் மட்டுமே நாட்டின் சமநிலையான பிராந்திய அபிவிருத்திக்கு இட்டுச் செல்லும், மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய ·மாகாணங்களின் அடித்தளம் ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதனால், மாகாண சபைகள் சிறந்த முறையில் கவனிப்பை மேற்கொள்ளுமிடத்து உயர்ந்த வளர்ச்சி அடையப்படலாம்.

இந்த நோக்கத்திற்காக பல எண்ணிக்கையான வழிமுறைகளை.'. கருவிகளைப் பயன்படுத்தலாம். அரச தனியார் பங்குடமையினூடாக தனியார் துறையின் பங்களிப்பைப் பெறுவதானது முன்னேற்றப்பட வேண்டிய முக்கியமான பகுதியாகும். இதனோடு இணைந்ததாக, பொருத்தமான பகுதிகளில் இருக்கும் கட்டு, தொழிற்படுத்து, சொந்தமாக்கு மற்றும் கட்டு, தொழிற்படுத்து, மாற்றல் செய் திட்டங்கள் கண்டறியப்பட வேண்டும். புகழ் பெற்ற மற்றும் வெற்றியடைந்த வர்த்தகர்களை மாகாண முதலீட்டு

[2] வரலாற்றில் முதற்றடவையாக மத்திய வங்கியானது, ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும் போது ஒவ்வொரு மாகாண சபையினதும் சாதனைகள் மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான விழிப்புணர்வை மாகாண சபைகள் முன்னேற்றுவதை இயலச் செய்யும் விதத்தில் கருத்தரங்கு தொடர் ஒன்றை ஆரம்பித்தது. சமநிலையான பிராந்திய அபிவிருத்தியை அடைவதில் அவற்றின் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு எடுக்கப்பட வேண்டிய பல்வேறு முயற்சிகளும் இந்தக் கருத்தரங்கில் மத்திய வங்கியினால் முன்மொழியப்பட்டன.

நடவடிக்கைகளில் பங்கு பற்றுவதற்கு அழைப்பதன் மூலம் அவர்களின் ஈடுபாட்டைப் பெற்றுக் கொள்வதற்கான புதிய முயற்சிகள் அறிமுகப்படுத்தப்பட இருக்கின்றன. இதனோடு இசைந்து செல்லத்தக்க வகையில் மாகாண சபைகளின் சொந்த நிறுவனங்களான முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு அதிகார சபைகள் போன்றவற்றின் உருவாக்கம், அரச தனியார் பங்குடமையில் நுழைதல், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஆதரவைப் பெறுதல் மற்றும் முதலீட்டிற்காக அரச நிலங்களை விடுவித்தல் என்பனவற்றில் ஏதாவது தடைகள் காணப்படுமாயின் அதை நீக்குவது அவசியமானதாகும்.

மாகாணங்களின் வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றத்தை உருவாக்குவதில் பல காரணிகள் பங்களிப்புச் செய்கின்றன. அவசியமான உட்கட்டமைப்பின் அபிவிருத்தி முக்கிய தேவைப்பாடாகும். அரசாங்கம் உட்கட்டமைப்பை முன்னேற்றும் செயற்பாட்டிலிருப்பினும் மாகாண சபைகளும் இத்தகைய உட்கட்டமைப்பு அபிவிருத்தி முயற்சிகளின் இணைந்த செயலாற்றத்தினை முன்னேற்றுவதனூடாக அவற்றின் பொறுப்பான மாகாணங்களில் அத்தகைய வசதிகளை மேலும் முன்னேற்றுவதற்கான அவற்றின் முயற்சிகளை அதிகரிக்க முடியும். அனைத்து மூன்று துறைகளிலுள்ள தொழில் முயற்சி நடவடிக்கைகளும், அதாவது, வேளாண்மை (பாரம்பரியப் பயிர்கள், விலங்கு வளர்ப்பு, மீன்பிடி, பணப்பயிர்கள், ஏற்றுமதி பயிர்கள், போன்றன) கைத்தொழில் (பதனிடல் கைத்தொழில்கள், சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள்) மற்றும் பணிகள் (நிதியியல் பணிகள், சுற்றுலா, ஏனையவை) என்பனவும் மாகாணங்களுக்குள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. மேலும், தொழிற் பயிற்சி, ஆரம்ப நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி உள்ளடங்கலான மனித மூலதன அபிவிருத்தி, தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் என்பனவும் வளர்ச்சிக்குப் பங்களிக்கின்றன.

இந்த இலக்கில் செல்லும் போது மாகாண சபைகள் அவற்றின் நடவடிக்கைகளை முன்கூட்டியே நன்றாகத் திட்டமிட வேண்டியது முக்கியமானதாகும். முக்கிய துறைகளிலுள்ள செயற்றிட்டங்களை கண்டறிதல், நிபுணர்களைப் பெறுதல், எல்லா நேரங்களிலும் அரசாங்கத்தை எதிர்பார்க்காது நிதி திரட்டக்கூடிய புதிய வழிகளைக் கண்டறிதல் மற்றும் தனியார்துறை பங்களிப்பை பெறுதல் என்பன கவனத்தில் எடுக்க வேண்டிய முக்கிய விடயங்களாகும்.

அத்துடன், ஒவ்வொரு மாகாணமும், மாகாண ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏனைய சமூக மற்றும் அபிவிருத்தி குறிகாட்டிகளை அதிகரிப்பதற்காக அதனது சொந்த உபாயத்திட்டம் மற்றும் உபாயங்களை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. ஒவ்வொரு மாகாணத்தினது முதலமைச்சரும் அத்தகைய இலக்குகளின் பொறுப்புத் தன்மையைக் கருத்திற் கொள்ள வேண்டியது அவசியமாகும். அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சியினது ஒப்புதல்கள், ஒவ்வொரு மாகாணத்தினதும் முன்னோக்கிய அபிவிருத்தித் திட்டத்தினூடாகப் பெறப்பட வேண்டும். இலக்குகளும் திட்டங்களும் எறிவு செய்யப்பட்ட விளைவுகளுடன் அறிவிக்கப்பட வேண்டும். அத்துடன் மாகாண சபைகள், பிராந்திய அபிவிருத்திக்கான அவற்றின் பங்களிப்பை மதிப்பிடுவதற்காக பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைமையை நடைமுறைப்படுத்த முடியும். இத்தகைய ஒரு முறைமையானது கொள்கைப் பரப்புகளுக்கான விளைவுக் குறிகாட்டிகளின் ஒரு தொகுதி, குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் அடையப்பட்டவைகளின் கணிய மட்டங்களான திட்டமிட்ட இலக்குகள் மற்றும் பெறுபேற்றைக் கண்டறிவதற்கு அவசியமான செயலாற்றல் இலக்குகள் என்பவற்றைக் கொண்டிருக்கும். நடைமுறைப்படுத்தலை நெருக்கமாகக் கண்காணிப்பதற்கும், ஒட்டுமொத்த முன்னேற்றத்தை அறிந்து கொள்வதற்கும் ஏனைய ஆர்வலர்களின் உதவியையும் பெறவேண்டும்.

ஆரம்ப நிலையில், பொருளாதார நடவடிக்கைகளை அதிகரித்தல், தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் பிராந்திய சமமின்மைகளைக் குறைப்பதற்கான அதனதன் மாகாணங்களுக்குள் வருமான மட்டங்களை அதிகரித்தல் என்பவற்றுக்காக அரச, தனியார் பங்குடமை அடிப்படையில் தனியார் துறையின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்படக்கூடிய குறைந்தது இரண்டு முக்கிய அபிவிருத்தி செயற்றிட்டங்களையாவது மாகாண சபைகள் அடையாளங் காணக்கூடியதாக இருக்க வேண்டும். வரவு செலவுத்திட்டம் 2008, நிதிக்குழுவின் ஊடாக, ஒவ்வொரு மாகாணத்திற்கும் ரூ.150 மில்லியன் படி மொத்தமாக ரூ.1,350 மில்லியன் பெறுமதியான தொகையை, அத்தகைய முக்கிய செயற்றிட்டங்களுக்காக அரசாங்கத்தின் பங்காக ஏற்கனவே ஒதுக்கியுள்ளது. இந்த நிதியானது இந்த முக்கிய செயற்றிட்டங்களுக்கான சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும். இந்த சூழ்நிலையில் சிறந்த செயலாற்றும் மாகாணம் அநேகமாக அறிந்து கொள்ளப்படலாம் என்பதுடன், தொடர்ந்து வரும் ஆண்டிற்கான மேலதிக அபிவிருத்தி ஒதுக்குகள் மூலம் பரிசளிக்கப்படலாம்.